Registered No. M-4483.

யுத்த சந்திரிகை

SECRETARIAT LIBRARY
1946
MADRAS GOVERNMENT

மலர் IV.] 1943-ம் ஞூ செப்டெம்பர் மீ 3உ வெள்ளிக்கிழமை [இதழ் 1

வீரர் வாழ்க!



சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் மனித வாழ்க்கையின் அடிப்படையான லட்சியங்கள். இவற்றிற்காக, உடல் வலிமையும் மன வலிமையுமுள்ள மாபெருந் தலைவர்கள் போராடியதாகச் சரித்திரம் கூறுகிறது. ஆனால், இன்று நம் கண் முன்பாக நடக்கும் சரித்திரத்தில், பண்டைக்கால வீரத் தலைவர்களின் அரும் பெருங் குணங்களெல்லாம் உருவெடுத்துத் தோன்றியதைப் போல, மிஸ்டர் சர்ச்சில் விளங்குகிறார். யுத்தத்தின் ஐந்தாவது ஆண்டு தொடங்கும் இன்றைய தினம், மா பெரும் சுதந்தரப் போராட்டத்தில், மன மொழி மெய்களால் ஈடுபட்டுள்ள நாகரிக உலகம், அவரைப் பாராட்டிப் போற்றுகிறது. விரைவில் வெற்றி பெறவேண்டி, க்யூபெக் மகா நாட்டில் அவர் செய்த திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்று வாழ்த்துகிறது.

முரசொலி

ஒன்று பட்டு முன்னேறுவோம்

நாம் எல்லோரும் ஒன்று பட்டு முன்னேறுவோம். வேறெதிலும் நாம் கவனத்தைச் செலுத்தலாகாது. நம்மா லியன்ற வரை ஒவ்வொருவரும் முயல வேண்டும். அந்தக் கொடுந்தியவர்கள் ஆதிக்கத்தால் உலக மக்கள் அனைவரும் பெரிதும் பாதிக்கப்படுகிறார் கள். ஆகவே அவர்களை அடியோடு ஒழிந்துத் தள்ள வேண்டும்.

*   *   *   *   *

இப்போதுள்ள நிலைமை நமக்குச் சாதகமா யிருக்கிறது. இதை நாள் தோறும் பத்தி ரிகைகளும் ரேடியோவும் விளக்கமாக நமக்குத் தெரிவிக்கின்றன. இதைக் குறித்து நாம் சிந்தித்துக் கொண்டிருந்தால், ஆபத்து நேர்ந்தாலும் நேரக் கூடும் என்று நினைக் கிறேன். யுத்தம் எப்போது முடியு மென்பது பற்றி இப்போது ஆலோசிப்பது வீண் முயற்சி என்று தான் நான் கருதுகிறேன். இந்த யுத்தம் எவ்வளவு காலம் நடக்கும்? இதற்கு எவ்வளவு செலவாகும்? என்பது பற்றி நாம் எண்ணிப் பார்த்து இந்தப் போராட் டத்தில் நாம் இறங்க வில்லை. அப்படி யானால், நாம் ஏன் இறங்க வேண்டும் என்னும் கேள்வி பிறக்கக் கூடும். அப்படி இறங்க வேண்டியது நமது கடமை. நமது கௌரவம், இதில் இறங்கும்படி தூண்டியது. இந்த யுத்தத்தில் வெற்றி கிடைக்கிற வரை இந்தப் போராட்டத்தை நடத்தினால் தான் நமக்குத் திருப்தியா யிருக்கும்.

*   *   *   *   *

இந்தியப் போர் முனையில்

ஜப்பானுக்கு விரோதமாக, பிரிட்டன் தன் கடமைகளை நிறைவேற்ற வேண்டு மானால், இந்தியாவி லிருந்தும் இந்து மகா சமுத்திரத்திலுந் தான் நிறைவேற்ற வேண்டும். வட மேற்கு ஆப்பிரிக்காவில், அமெரிக்கப் படைகளையும் பிரிட்டிஷ் படைகளையும் ஒன்று சேர்த் துத் தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் போராடியதன் பயனாகத் தான் வெற்றிக் கிடைத்தது. அது போலவே, இந்தியாவிலும் இப் படைகளுக்கு ஒரு தளபதியை நியமித் திருக்கிறது.

*   *   *   *   *

ரஷ்யாவுக்கு வணக்கம்

கடைசியாக ரஷ்யாவி லிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களைக் கொண்டு பார்த்தால், ஸ்டாலின் தன் பொழுதை வீணாகக் கழித்துக் கொண்டில்லை என்று தெளி வாகத் தெரிகிறது. இந்த மிகச் சிறந்த கோடைக்காலப் போராட்டத்தை முன்னிட்டும், கார்க்கோப்பிலும், டகன்ராகிலும் அவருடைய படைகளுக்குக் கிடைத்த வெற்றிகளை முன் னிட்டும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய முழுதும் அவருக்கு வணக்கம் செலுத்துகிறது. இந்த வெற்றிகளின் பயனாக ரஷ்ய நாடுகளில் மிகப் பெரும் பகுதி ஜெர்மானியர் வச மிருந்து மீண்டன. அவற்றைத் தாக்கிக் கொண்டிருந்த லட்சக் கணக்கான எதிரிகள் அடியோடு அழிந்தார்கள்.

14542.

*   *   *   *   *

நம்மால் அளவிட முடியாது

ரஷ்யப் படைகள் எவ்வளவு கடுமையாகத் தாக்கின வென்றும், இன்னும் தாக்கிக் கொண்டிருக்கின்றன வென்றும் நம்மால் அளவிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் அது கடுமையான தாக்குதல் என்று மட்டும் சொல்லலாம். நமது வெடிகுண்டு விமானங்கள் ஜெர்மனியில் செய்துள்ள நாசங்கள் மகா அதிகம். பிற நாட்டார் மீது போர் தொடுத்துக் கொண்டிருந்த அந் நாட்டவர்கள் அடைந்த கஷ்டங்களும் கொஞ்ச மல்ல. சென்ற நூறுண்டுகளாக இல்லாத அவ்வளவு பெரும் நாசம் முதன் முதலாக ஜெர்மனிக்கு ஏற் பட்டிருக்கிறது.

*   *   *   *   *

JL

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் III] 1943-ம௵ செப்டெம்பர்மீ 3உ. [இதழ் 35

அரசியல் ஒற்றுமையும் நாட்டு முன்னேற்றமும்

கடந்த நான்கு வருஷங்களாக நிகழ்ந்த தென்ன? உலக சரித்திரத்திலே மகா துக்ககரமான சம்பவங்கள் நிகழ்வதற்குக் காரணமானது இந்த யுத்தம். இந்த யுத்தத்தின் வருஷப் பூர்த்தியைக் குறித்து நம் போன்றவர்கள் எழுத ஆரம்பித்தால், ஒவ்வொரு வருஷத்திலும் போர் சம்பந்தமாக நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்துத் தான் எழுதவேண்டும். இளகிய மனமுள்ளவர்களுக்கு இது முடியாத காரியமென்று கூடச் சொல்லலாம். ஏராளமான மக்கள் மடிந்தனர்; காயப்பட்டனர்; அநேக தேசங்கள் அழிந்துவிட்டன. அநேகர் சித்திரவதைக்கு உள்ளானார்கள். அநேகக் கோவில்கள் வெடிகுண்டுகளால் சிதறுண்டன. அநேகக் கப்பல்கள் ஆழ்ந்தன. இரத்தமும் கண்ணீரும் திரண்டோடுவது தான் நம் கண்களுக்குத் தோன்றும்.

முன்பு நிகழ்ந்தவற்றைக் குறித்து எண்ணிப்பார்த்தும், எதிர்கால நிலைமையைக் குறித்தும் திருப்தியடையத்தக்கபடி இந்த வருஷத்திய யுத்த நிலைமையிருக்கிறது. நம் எதிரிகளான இத்தாலியர்களும் ஜெர்மனியர்களும் உள்ள நிலைமையைவிட மிகவும், உயர்ந்த நிலைமையிலிருக்கிறோம்.

மனித இனத்தின் வாழ்க்கை நிலைமையில் ஒரு மகத்தான மாறுதல் சென்ற வருஷம் ஏற்பட்டிருக்கிறது. அச்சு நாடுகள் வெற்றிகொள்ள முடியாது என்பது ஒருபுரமிருக்க, கடைசிவரை அவசியம் நேர்ந்தால் போராடவேண்டும் என்பதற்காகத் தான், வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ரஷ்யா புத்துயிர் பெற்றுவிட்டது. அதன் தாக்குதலைத் தடுக்கக் கூடிய திறமை எதிரிகளுக்குக் கிடையாது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் அமெரிக்காவுக்கும் ஆப்பிரிக்காவிலும் சிசிலியிலும் கிடைத்திருக்கும் வெற்றிகள் மகத்தானவை, பரிபூரணமானவை. ஐரோப்பாவில் நேச நாட்டு விமான பலம் ஓங்கிக்கொண்டிருக்கிறது. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் ஏராளமாக நாசமாகின்றன. ஆனால், நேசநாடுகள் கப்பல்களை ஏராளமாகக் கட்டிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையிலே நேசநாடுகளை வெல்லவே முடியாது.

யுத்தம் முடிந்த பிறகு சாம்ராஜ்ய நாடுகளெல்லாம் கைக்கொள்ளத் தக்கதோர் திட்டத்தை வகுக்க வேண்டியது அவசியந் தான். விரும்பத் தக்கதுங் கூட. இதனால், ஆலமரத்தைச் சுற்றிவந்த உடனேயே அடி வயிற்றைத் தடவிப் பார்த்தவளைப்போலச் செய்யக்கூடாது. வெகுவாக நாம் செய்யவேண்டிய காரியங்களும் சகிக்கவேண்டிய துன்பங்களுமிருக்கின்றன. இனி வருங்காலம், மகா கஷ்டமான காலமாக விருக்கலாம். 1950-ம் வருஷத்திற்குள்ளாகவே யுத்தம் நின்றுவிடுமானால் மேலான காரியம் என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆகவே, நம் ஊக்கத்தை கை விடலாகாது. பெருமிதமாகவு மிருந்துவிடலாகாது. அப்படி யிருந்தால், பெருந் துன்பந்தான் விளையும்.

எப்படி யிருந்த போதிலும், நாம் எதிர் காலத்தைக் குறித்துச் சிந்திப்போம். ஆனால், இப்போதைக்கு ஒரு துறையில் தான் நமது கவனத்தைச் செலுத்த வேண்டும். அது தான் இந் நாட்டின் ஒற்றுமை இதை நாம் எந்த விதத்திலும் அடைந்தே தீர வேண்டும். அதை அடைய இது முதலே முயற்சிக்க வேண்டும். அது, மத ஒற்றுமையல்ல; தொழில் பற்றிய ஒற்றுமையல்ல; வீட்டு வழக்க பழக்கங்களை யொட்டிய ஒற்றுமையுமல்ல. கலப்பு மணத்தினாலும், சம பந்தி போஜனத்தாலும் உண்டாகக் கூடிய ஒற்றுமையுமல்ல. 40 கோடி மக்கள் வாழும் இந்த கண்டத்தில், இவை விரும்பத்தக்கவை தான்; ஆனால் இவை பற்றிய வழக்க பழக்கங்கள் மாற்றி யமைக்க முடியாதவையா யிருக்கின்றன. ஒரு நாட்டின் ஆசைகளும் மூல பலங்களும் எவ்வளவு தான் உயர்ந்திருந்த போதிலும், அங்கே அரசியல் ஒற்றுமை யில்லா விட்டால், அது ஒரு நாடாக விளங்க முடியாது. சர்வ தேச சங்கத்தில் பெரு மிதத் தோடு தலை தூக்க முடியாது. இந்தியா அரசியல் ஒற்றுமையடைய வேண்டுமானால், கலை ஒற்றுமையை விட, சிறந்த தோர் வழி வேறுண்டா?

இது பற்றி நாம் விவாதிக்கப் புகு முன்னதாக, ஒற்றுமை ஏற்பட ஒட்டாதபடி தடுக்கக் கூடிய முக்கியமான காரணங்கள் எவை என்பது பற்றி, முதலில் கவனிப்போம். பிறகு அவற்றை எப்படிப் போக்குவது என்றும் ஆராய்வோம். இந்தக் காரணங்களில் மிகவும் முக்கியமானது விடுதலை. அன்னியர் அரசியல் ஆட்சியினின்று நீங்கிக் கொள்ளுதல் தான் விடுதலை என்று அருத்தம் சொல்லுகிறார்கள். இந்த அருத்தம் அறிவிற்குப் பொருத்தமானதல்ல. இந்தியாவின் ஆட்சி முறையை ஒப்புக்கொள்ளக் கூடியவர்கள் யாரேனும் முன் வருவார்களானால், அவர்களிடம் அதை ஒப்புக் கொடுத்துவிடுவதாக மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசாங்கத்தார் வாக்களித் திருக்கிறார்கள். இந்தியாவை ஆளுவது என்பது, மகத்தானதோர் பொறுப்பு. மன்னர் பிரான் அரசாங்கத்திற்கு உட்பட்டவர்கள் இப்படிப்பட்ட விடுதலையைத் தரவேண்டு மென்று மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர், தாம் இந்தியப் பிரஜைகள் என்றே கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்திய ஒற்றுமை என்னும் வெள்ளத்தைத் தடுக்கத் தக்க அணைக்கட்டுகளாக இவர்கள் இருக்க முடியுமா? இவர்களுக்கு அவ்வளவு ஆற்றல் ஏது?

பல நூற்றாண்டுகளாக அமைந்துள்ள சமுதாய அமைப்புத் தான், பொருளாதார ஒற்றுமையும் அரசியல் ஒற்றுமையும் ஏற்பட ஒட்டாதபடி தடுத்துக் கொண்டு வந்திருக்கின்றன வென்பது உண்மையல்லவா? உலக உண்மைகளெல்லாம் மாயை என்று போதிக்கிறது இந்திய தத்துவ சாஸ்திரங்கள். அதன் சமுதாய அமைப்பில், மக்கள் ஆயிரக் கணக்கான வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றைத் திருத்தி யமைக்க வேண்டிய பருவம் வந்துவிட்டது. இம் முயற்சிகள் பலிக்காது போனால், இந்திய மக்களின் சமுதாய நிலையைத் தகுந்தபடி சீர்ப்படுத்திக் கொள்ளாதது தான் காரணம் என்று உணர்ந்து கொள்ளாமல், அந்நியர்கள் 'மீது பழி சுமத்துவது அவர்கள் வழக்கம்.'

அவரவர் குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளுவதற்கு வழி அவர்களுக்குத் தெரியாதிருக்கும் போது, அவரவர் குறைபாடுகளை அவரவர்களே போக்கிக் கொள்ள வேண்டு மென்று கூறுவதில் அருத்தமே கிடையாது. ஆகவே கலை ஒற்றுமையைக் குறித்து நாம் கவனிப்போம். இந்த யுத்த காலத்தின் 5-வது வருஷம், இந்திய மீட்சியின் முதல் வருஷமாக இருக்கப்படாதா? இயல் இசை நாடகம் என்னும் கலைகளை நாம் அனைவரும் ஊட்டி வளர்ப்போம். தத்துவ சாஸ்திரங்களையும், சரித்திரங்களையும், சிற்பத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளவை பற்றியும், நாடு முழுதும் அனைவருக்கும் பரவச் செய்வோம். பிரசார வழிகளைப் பெருக்குவோம். உதாரணமாக, பத்திரிகைகள், படங்கள் மிகுந்த சஞ்சிகைகள், ரேடியோ, சினிமா, வாசகசாலை, பயிற்சிக் கூட்டங்கள் முதலியவற்றை அதிகப் படுத்த வேண்டும். பண்டைக் காலத்தில் இந்நாட்டவர்கள் அழகிய பொருள்களைச் செய்வதில் மிகவும் சிறப்புப் பெற்றிருந்தனர். அந்தச் சிறப்பை மீண்டும் நிலை நாட்ட வேண்டும். எல்லா வகைகளிலும் ஒற்றுமை பெறவேண்டும். உடற் பயிற்சியையும் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். இவை பள்ளிக்கூடத்தில் மட்டும் நடை பெற்றால் போதாது; விளையாட்டு ஸ்தலங்களிலும், 'க்ளப்'களிலும் நடைபெற வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் விளையாட்டு ஸ்தலமும் 'க்ளப்'பும் இருக்க வேண்டும்.

இவற்றிற்கு நாட் செல்லுமென்று நீங்கள் சொல்லலாம். யுத்தமுங் கூட நெடு நாட்களாகத் தான் நடக்கிறது. ஜெர்மனியின் கீழைக் கோட்டையில் ரஷ்யர்கள் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள் ஐரோப்பாவின் மேலைக் கோட்டையில் நேச நாட்டுப் படைகள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நமக்குக் கொஞ்சம் அவகாசமிருக்கிறது.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்பு படம் : மிஸ்டர் சர்ச்சில்	1
வீரர் வாழ்க	1
முரசொலி	2
தலையங்கம் : அரசியல் ஒற்றுமையும் நாட்டு முன்னேற்றமும்	3
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4
க்யூபெக்குக்கு ஸ்டாலின் ஏன் வரவில்லை ..	5
நேச நாடுகளின் ஒற்றுமை பலத்தின் பயன் ..	6
ஜப்பானியக் கூட்டு முன்னேற்றத் திட்டம் என்றால் என்ன ?	8
ஒழிவுக்கு முன் ஓசை	9
அங்கும், இங்கும்	10
ஆரம்பக் கல்வியும் படைகளில் சேரும் மாணவரும்	11
யுத்த சம்பவங்கள்	12
கடைசிவரை போராடியே தீரவேண்டும் ..	15
இளைஞர் லட்சியம்	16
சென்னையில் துருப்புகளுக்கு சௌகரியங்கள் ..	16
ஆசிரியருக்கு பிவின் மாணவர் கடிதம் ..	16

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ரோம் பாது காப்பில்லாத நகரமா ?

சென்ற ஆகஸ்ட்டு மாதம் 29-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை எடின்பரோவில் பிரிட்டிஷ் நிதி மந்திரி வைகொண்ட் சைமன் பேசிய போது கூறியதாவது:—

"ரோம் ஒரு பாதுகாப்பற்ற நகரம் என்று பிரகடனம் செய்யப்பட்டது என்னும் ஒரு காரணத்தைக் கொண்டே, அதை நாம் தாக்கக் கூடாது என்பதில்லை. இது ஒரு பெரிய தலை நகரம். அரசாங்கத்திற்கும் யுத்த நடவடிக்கைகளுக்கும் மூலஸ்தானம். யுத்த உற்பத்தி ஸ்தானம். நிர்வாக உத்தரவுகளெல்லாம் இங்கிருந்து தான் கிளம்புகின்றன. இராணுவப் போக்கு வரவுகள் இங்கே தான் சந்திக்கின்றன. இப்படிப்பட்ட தோர் நகரத்தை யுத்தப் பகுதி யல்லவென்று சொல்லுவது கொஞ்சமும் பொருந்தாது."

இது போலவே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாகவும் அமெரிக்க அரசாங்கத்தின் சார்பாகவும் பலர் கூறியிருக்கிறார்கள். இவர்கள் கூறியவற்றைக் குறித்தும், ரோம் நகரத்தைப் பாதுகாப்பற்ற தோர் நகரமாகப் பிரகடனம் செய்தது சம்பந்தமான பிரச்சினைகளைக் குறித்தும், பத்திரிகைகளில் பல கட்டுரைகள் வெளி வந்தன. இது சம்பந்தமாக இத்தாலிய அரசாங்கத்தார் ஒரு பிரகடனம் வெளியிட்டு விட்டால் மட்டும் போதுமா ? தம் எதிரிகளோடு நேர் முகமாகவோ மறை முகமாகவோ உண்மையிலேயே இராணுவ சம்பந்தமாக ரோமாபுரியால் எதுவும் செய்ய முடியாது என்னும் உறுதிப்பாடு நேச தேசங்களுக்கு ஏற்படுவது மிகவும் அவசியம். இதை எப்படிச் சாதிக்க முடியும் ? உதாரணமாக ரோம் நகரத்திலுள்ள இராணுவ டிப்போக்களையும் தொழிற்சாலைகளையும் மூடிவிட வேண்டும். ரோடுகள் வழியாகவும் ரயில் வழியாகவும் இராணுவ சம்பந்தமான எதையும் அனுப்பகூடாது. யுத்தத்தில் நேர் முகமாகவோ மறைமுகமாகவோ சம்பந்தமுள்ள எல்லா அரசாங்க இலாக்காக்களையும் அப்புறப் படுத்திவிட வேண்டும். இவை எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டதாக ரோம் அரசாங்கம் கூறிய போதிலுங் கூட, நேச நாட்டுக் கமிஷன் ஒன்று அங்கே சென்று அவற்றைக் கண்டா லொழிய, அவற்றை எப்படி நம்புவது ? இத்தாலியப் படைகள் அந்நகரத்தை விட்டு வெளியேறினால், உடனே ஜெர்மானியர் தம் படைகளைக் கொண்டு வந்து நிறைத்து விடுகிறார்கள். பாது காப்பற்ற நகரங்கள் என்று பிரகடனம் செய்யப்பட்டிருந்த மற்ற நகரங்களிலும் ஜெர்மன் படைகள் இப்படித் தான் செய்தன.

* * * *

படோக்ளியோ பிரகடனம் : மதில் மேல் பூனை.

ரோம் நகரத்திலுள்ள இராணுவ ஸ்தலங்களை நேச நாட்டுப் படைகள் தாக்குவதற்குத் தயங்கும்படி செய்ய வேண்டும் என்னும் நோக்கத்தைக் கொண்டு தான், ரோம் நகரம் பாதுகாப்பற்ற தோர் நகரமென்று படோக்ளியோ அரசாங்கம் பிரகடனம் செய்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. அவர்களுடைய நோக்கம் ஈடேறுமானால், மிலான் முதலிய நகரங்களில் சமாதானம் செய்து கொள்ள வேண்டு மென்பதற்கு அனுசரணையாக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், ரோம் நகரத்திலும் நடை பெற ஒட்டாதபடி தடுத்து விடலாமென்று, அவர்கள் கருதுகிறார்கள் போலும்.

ஸ்டாக்ஹோமி லிருந்து வெளிவரும் 'டிட்னிஞ் சென்' என்னும், பத்திரிகையின் ரோம் நகர நிருபர், 'மதில்மேல் பூனை' கொள்கையை படோக்ளி அரசாங்கம் மேற்கொண்டிருப்பதைக் குறித்து தன் பத்திரிகைக்கு எழுதி இருப்பதாவது :—

"பழைய அரசாங்கத்தின் அந்நிய நாட்டுக் கொள்கை, யுத்தமும், ஜெர்மனியோடு நெருங்கி ஒத்துழைப்பதுந் தான். இதே கொள்கையை மேலும் கையாண்டு கொண்டு, மேற் கொண்டு என்னென்ன சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று எதிர் பார்த்திருப்பது தான் தற்போதைய இத்தாலிய அரசாங்கத்தின் போக்கு என்று தெரிகிறது."

யுத்தத்தில் கலந்து கொள்ளாத நாடுகளைச் சேர்ந்த சிலர், சமீபத்தில் ரோம் நகரத்திலிருந்து சுவித்சர்லந்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறினார்கள்:—

"இராணுவ நிபுணர்களும் பொருளாதார நிபுணர்களும் அமைந்த தோர் ஜெர்மன் கோஷ்டி, ஆகஸ்ட்டு மாதம் 8-ம் தேதி ரோம் நகரத்திற்கு வந்து சேர்ந்தது பிரான்சிலிருந்தும் பால்கன் நாடுகளி லிருந்தும் இத்தாலியப் படைகளைத் திரும்பி யனுப்பி விடுவது, ஜெர்மானியிலுள்ள இத்தாலியத் தொழிலாளர்களையும், இத்தாலியிலுள்ள ஜெர்மன் படையினரையும் திருப்பி அவரவர் நாடுகளுக்கு அனுப்பி விடுவது முதலியவைக் குறித்து இந்தக் கோஷ்டியார் இத்தாலிய அரசாங்கத்தோடு விவாதித்தார்கள்."

இத்தாலியின் தென் பகுதியிலிருந்தும் மத்தியப் பகுதியிலிருந்தும் வாபீசாகி விட ஜெர்மன் படைகள் ஆயத்தமாயிருக்கிறார்கள். என்றாலும், இதற்கு ஒரு நிபந்தனையை விதிக்கிறார்கள். அதன்படி, தமக்கு விரோதமாக எந்த விதப் போராட்டத்தையும் நடத்துவதற்கு இப்பகுதியிலுள்ள எந்தவித தளத்தையும் நேச நாட்டினர் பயன்படுத்த மாட்டார்கள் என்று இத்தாலிய அரசாங்கம் ஜாமீன் கொடுக்க வேண்டுமாம் ! வட இத்தாலியைக் குறித்த பேச்சே கிடையாது. இதிலிருந்து, என்னவானாலும், ஜெர்மானியர்கள் தாம் இருந்த இடத்திலேயே யிருக்க வேண்டுமென்று முடிவு கட்டி விட்டார்கள் என்று தெரிகிறது. முன் கூறியவாறு 'டேஜென்ஸ் நிஹிடர்' என்னும் பத்திரிகைக்கு அதன் நிருபர் எழுதினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு இப் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளிலிருந்து, பான் ரிப்பன்ட்ராப் ரோம் நகரத்திற்கு வந்து படோக்ளியோவுடன் கலந்து பேசியதாகவும், இத்தாலியிலுள்ள ஜெர்மன் படைகளை மீண்டும் ஜெர்மனிக்குக் கொண்டு போய்விடப் போவதில்லையென்றும், "சவகாசம் பெற வேண்டியதை முன்னிட்டு, எவ்வளவு காலம் இத்தாலியில் போராடிக் கொண்டிருக்கக் கூடுமோ அவ்வளவு காலம் போராடிக் கொண்டிருக்கப் போவதாகவும் அறிவித்தார் என்று தெரிகிறது.

படோக்ளியோவின் கொள்கையைப் பொது ஜனங்கள் ஆதரிப்பதாகத் தெரிகிறது. இதுபற்றி, "ஸ்வென்ஸ்கா டக்ப்ளாடெட்" என்னும் பத்திரிகையின் பெர்ன் நிருபர் குறிப்பிட்டதாவது :—

"நேச நாடுகளோடு சமரசம் செய்து கொள்ளுவதற்குப் பல தடைகளிருக்கின்றன வென்று இத்தாலிய அரசாங்கம் கூறும் காரணங்களை இத்தாலியப் பொது மக்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளு

(14-ம் பக்கம் பார்க்க.)

க்யூபெக்குக்கு ஸ்டாலின் ஏன் வரவில்லை

நேச நாடுகளின் நன்மையை முன்னிட்டுத்தான்

மிஸ்டர் சர்ச்சில் கூறும் விளக்கம்

மிஸ்டர் சர்ச்சில்.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் க்யுபெக்கிலிருந்து ஒரு வானொலிப் பிரசங்கம் ஆகஸ்ட்டு மாதம் 31-ம் தேதி செய்தார். அப்போது, முதலில் க்யுபெக் மகா நாட்டைப்பற்றி அவர் பேசினார். முழுக்க முழுக்க இல்லாவிட்டாலும், முக்கியமாக ஜப்பான் மீது எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பற்றியே தான் பேசப்பட்டது என்று அவர் தெரிவித்தார். "ஆகையால் தான், ரஷ்யா இதில் கலந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் ரஷ்யா ஜப்பானோடு 5 வருஷ அனுக்ரமிப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது" என்று அவர் சொன்னார்.

மேலும் ஜெர்மன் படைகளோடு முக்யமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் சோவியத் படைகளுக்கு ஸ்டாலின் தற்போது பிரதான தளபதியாக இருந்து வருகிறார் என்று சர்ச்சில் தெரிவித்தார்.

மிஸ்டர் சர்ச்சில் மேலும் கூறியதாவது :—

வெகு சீக்கிரத்தில் இந்த 3 வல்லரசுகளின் அயல் நாட்டு மந்திரிகள் அல்லது பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாடு நடைபெறுவதற்கான அறிகுறிகளிருக்கின்றன. அப்போது க்யுபெக் மகாநாட்டின் விளைவாக ஏற்பட்டிருக்கும் பிரச்னைகள், மத்யதரைக் கடலில் நேசக் கட்சியாரின் ராணுவ நடவடிக்கைகள், எதிர்காலத்திலும் தற்போதும் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் பிரச்னைகள், ஆகியவைகளைப்பற்றி முழுதும் விவாதிக்கப்படும்.

ஜூலை மாத ஆரம்பத்தின்போது தான், ரூஸ்வெல்டை மறுபடியும் சந்திக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது. தற்செயலாக இச் சந்திப்பை க்யுபெக்கில் வைத்துக் கொள்ளலா மென்று ரூஸ்வெல்ட் சொன்னார்.

இது ரொம்பவும் பொருத்தமான இடம். பிரெஞ்சு கானடாவின் தலைநகரம் இது. சென்ற 40 வருஷமாக பிரான்ஸின் பெருமையை நான் பாராட்டி வந்திருக்கிறேன்- ஆங்கிலோ-பிரெஞ்சு ஒப்பந்தம் 1904-ல் ஏற்பட்டது முதல், நான் பிரெஞ்சுக்காரர்களுடன் மும்முரமாக ஒத்துழைத்திருக்கிறேன்.

கானடா பிரதம மந்திரி மிஸ்டர் மெக்கன்ஸி கிங் கானடா ராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் பலமுறை நான் கலந்து பேசும் சந்தர்ப்பமும் வாய்த்தது. கனடா, ராணுவ வகையில் மட்டுமன்றி பண வகையிலும் பிரிட்டனுக்குப் பெரும் உதவி செய்திருக்கிறது. இதற்காக, கானடாவில் இருந்துகொண்டே பிரிட்டனின் சார்பாய் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதே போல் ஆஸ்டிரேலியர், நியூஜிலந்து வாசிகள், தென் ஆப்பிரிக்கர் ஆகியோருக்கும் அவர்கள் முன்னிலையில் பிரிட்டன் சார்பாக நன்றி தெரிவிக்க நான் ரொம்பவும் ஆசைப்படுகிறேன்.

சுமார் 40 வருஷத்துக்கு முன் பிரிட்டன் பிரான்ஸோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதென்று நான் சற்று முன் சொன்னேன். ஆனால் இன்னொரு பெரிய தேசமுடனும் பிரிட்டனுடன் ஒரு முக்கியமான ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. நல்லெண்ணம், பரஸ்பர உதவி ஆகியவைகளுக்கான ஓர் உடன்படிக்கையை 20 வருஷ காலத்துக்கு சோவியத் ரஷ்யாவுடன் நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆங்கிலோ-அமெரிக்க மகா நாட்டில் ரஷ்யா பிரதிநிதித்துவம் வகிப்பது அதற்குப் பொருத்தமாயிராது. மத்யதரைக் கடலிலும் மற்ற பகுதிகளிலும் உள்ள ராணுவ படைகள், உடனடியான ராணுவ நடவடிக்கைகளில் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கின்றன.

க்யுபெக் மகாநாடு இவ்விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்ததோடல்லாமல், ஜப்பானுடன் நடக்கும் யுத்தத்தை இன்னம் தீவிர மாக்குவதையும் கடுமையாக்குவதையும் பற்றி இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. ஜப்பான் விஷயத்தில், சோவியத் சர்க்கார் 5 வருஷ அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகையால் ரஷ்யா இதில் கலந்துகொள்வது அதற்குப் பொருத்தமாயிராது. அதை அழைப்பது அதற்கு சங்கடமான மனவேதனையை விளைவிப்பதாகும்.

ஆனால், ஸ்டாலின் உள்பட மூவரும் சந்திக்கவேண்டும் என்ற ஆவல் ரூஸ்வெல்டுக்கும் எனக்கும் அதிகமாயுண்டு.

மார்ஷல் ஸ்டாலின்.

இதுவரையில் 3 பேரும் சந்திக்கவில்லையே என்றால், அதற்குக் காரணம் நாங்கள் முழுப் பிரயாசை எடுத்துக் கொள்ளவில்லை என்பதல்ல. ஸ்டாலின், ரஷ்ய படைகளின் பிரதான தளபதியாக இருந்து, அங்கே நேரடியாக யுத்தத்தை நடத்தி வருகிறார். இது ரஷ்யாவுக்கு மட்டுமல்லாமல், ஐக்ய நாடுகள் அனைத்திற்குமே முக்கியமானதாகும்.

ஸ்டாலின் வீண் பொழுது போக்கிக் கொண்டிருக்கவில்லை என்பதில் சந்தேகமே இடையாது. கார்க்கோப், டகன்ராக் வெற்றிகளுக்காகவும், இந்த பிரமாதனமான கோடை கால போராட்டத்துக்காகவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பூராவும் ரஷ்யாவுக்கு பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறது. ஸ்டாலினை சந்திக்க ரூஸ்வெல்டும் நானும், இன்னம் முயற்சி செய்து கொண்டு வருவோம். இதற்கிடையே இந்த 3 நாடுகளின் அயல் நாட்டு மந்திரிகள் அல்லது பிரதிநிதிகளின் மகாநாடு ஒன்று ஏதேனும் ஒரு வசதியான இடத்தில் நடைபெற வேண்டியது மிக அத்தியாவசியம். உலகம் தக்க பாதுகாப்புடன் இருப்பதற்கான வருங்கால ஏற்பாடுகள் சம்பந்தமாய், பல்வேறு முக்யமான பிரச்னைகளையும் இது விவாதிக்கும். கடைசியில் தேச அதிகாரிகளும் அரசாங்க அதிகாரிகளும் தலையிட்டு முடிவு செய்யவேண்டிய கட்டம் வரையில், இவர்கள் இப் பிரச்னைகளைப் பற்றி சர்ச்சை நடத்துவார்கள்.

மத்யதரைக் கடலில் ஆங்கிலோ-அமெரிக்க படைகள் அடைந்த வெற்றிகளின் பலனாக ஏற்படும் அரசியல் முடிவுகளிலே, ரஷ்யப் பிரதிநிதிகளையும் நம்மோடு சேர்த்துக்கொள்ள நாம் மகிழ்ச்சி யடைகிறோம்.

வாஸ்தவத்தில் ரஷ்ய நண்பர்களையும் நேச நாடுகளையும் பூர்ணமாக நம்பி கலந்துகொள்ளாதபடி நாம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் போவதில்லை. இந்த யுத்தத்தின் போக்கு எப்படி யிருக்குமென்று முன் கூட்டிச் சொல்லமுடியாது; ஆகையால் எதிர்பாராத யுத்தப் போக்கினால், வேறு வழியின்றி நாம் ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதாயிருந்தால், அத்தகைய ஒரு நடவடிக்கையைப் பற்றியும் ரஷ்யர்களைக் கலக்காமல் இல்லை.

ஹிட்லரின் அதிக்கிரமத்துக்கு விரோதமாயுள்ள இந்த 3 நாடுகளும் ஒன்று போல நினைத்து, ஐக்யமாக இருந்து ஒரு முடிவு செய்தால் உலகம் முழுதுக்குமே நன்மையுண்டு.

வருங்கால விஷயங்களிலும் ராணுவ பிரச்னைகளிலும் இந்த ஒற்றுமை நிலவவேண்டும்.

'ரஷ்யர் குறைகூறத்தான் செய்வார்கள்'

ஜெர்மனியை தாக்க மேற்கு பிரான்ஸில் 2-வது யுத்தமுனை ஏற்படுத்துவது பற்றி, சென்ற 2 வருஷமாக நாம் எவ்வளவோ பேசக் கேட்டிருக்கிறோம். பெரும் பளுவை தாங்கிக்கொண்டிருக்கும் ரஷ்யர், விடாமல் இதைக் கோரிக்கொண்டிருப்பது, ரொம்ப சகஜம். இதைப் பற்றி புகார் மட்டுமல்லாமல், நாம் முன்பே ஆரம்பிக்கவில்லை யென்று கடிந்துகூடப் பேசுவார்கள் தான்.

(7-ம் பக்கம் பார்க்க)

நேசநாடுகளின் ஒற்றுமை பலத்தின் பயன்

அச்சுநாடுகளுக்குள் பரஸ்பர சந்தேகம்

சென்ற 12 மாதங்களில் நடைபெற்ற யுத்தத்தின் முக்கியமான அம்சங்களாவன:—1. முசோலினி வீழ்ச்சி ; 2. நேச நாட்டினர் தொடர்ச்சியாக தரையில் பல வெற்றிக ளடைந்தனர். 3. யுத்தத்தின் போக்கு நமக்குச் சாதகமான முறையில் மாறியது. இதன் பயனாக, ஸ்டாலின்கிராட், குடால்கனல், துனீசியா, அட்டு, ஓரெல், சிசிலி, முண்டா, கார்க்கோப் முதலியவை நேச நாடுகள் வயப்பட்டன. இந்த வெற்றிகளுக்குக் காரண மென்ன ? 1. இந்த நான்காவது வருஷம் நடைபெறும் யுத்தத்தில் ஏராளமான பொருள்களையும் படைகளையும் குறிப்பிட்ட காலந் தவருது நேச தேச படைகள் உபயோகித்தன. 2. எதிரிகளின் ஆயுத பலத்தை விட, நேச தேசங்களின் ஆயுத பலந்தான் மேலானது என்னும் உணர்ச்சி நேச நாட்டுப் படைகளுக்குத் தோன்றி விட்டது. 3. நமது படைத் தலைவர்களின் திறமையில் பரிபூரண நம்பிக்கை யுண்டாகிவிட்டது. ஆனால், ஜப்பானியர்களும் ஜெர்மானியர்களும் செய்யும் பிரசாரம் என்ன தெரியுமா ? "எப்பாடு பட்டாவது கடைசி வரை போராட வேண்டும்" என்னும் பல்லவி தான்.

நேச நாட்டுப் படைகள் வெற்றிக்கு முக்கியமான காரணம், நேச நாடுகளிலுள்ள மக்களுடைய தளராத உணர்ச்சி தான். அன்றியும் அங்குள்ள தொழிலாளர்க ளெல்லாம் சோர்வில்லாது உழைக்கிறவர்கள். விடா முயற்சி பெரிதும் உடையவர்கள். கடுமையான பயிற்சி பெற்றவர்கள், தங்கள் படைகளின் போர்த் திறமையில் பரிபூரண நம்பிக்கை கொண்டுள்ளவர்கள். இவை யனைத்திலும், அவர்களிடம் காணப்படும் மிகச் சிறந்த குணம், கூட்டுறவுத் தன்மை தான். இந்தக் கூட்டுறவுக்கு சென்ற 1941-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் அட்லாண்டிக் பிரகடனத்தின் மூலமாக மிஸ்டர் சர்ச்சிலும், அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்டும் அடிகோலினார்கள்.

பிரிட்டிஷ் அமெரிக்கக் கூட்டுறவு

சமீபத்தில் இவ்விருவரும் க்யூபெக்சில் சந்தித்தனர். இது அவர்களுடைய 6-வது சந்திப்பு. அட்லாண்டிக் பிரகடனம் பிறந்த அதே வருஷம் டிசம்பர் மாதத்தில் வாஷிங்டனில் ஒரு முறை சந்தித்தார்கள். ஜப்பானியர்கள் துரோகத்தனமாக யுத்தத்தில் இறங்கியதும், அதே சமயந் தான். 1942-ம் வருஷம் மீண்டும் வாஷிங்டனில் இவர்கள் சந்தித்த போது தான், டோப்ருக் வீழ்ந்தது. இந்த வருஷ ஆரம்பத்தில் தான், வட ஆப்பிரிக்காவில் எதிரிகளுக்குள் பெருங் கலவரங்களையும் குழப்பங்களையும் உண்டாக்கும் வகையில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படைகளும் அமெரிக்கப் படைகளும் தலை சிறந்த முறையில் ஒத்துழைத்தன. இது, இந்த வருஷம் 'காசப்ளாங்காவில் இவ்விருவரும் சந்தித்துப் பேசியதனுல் ஏற்பட்ட நற்பயன் தான்.

இந்த வருஷம் மே மாதம் மீண்டும் வாஷிங்டனில் இவர்கள் சந்தித்துப் பேசினார்கள். இதன் பலனாகத் தான் ஒரே சமயத்தில் இரண்டு போர் முனைகளை ஆரம்பிக்க வேண்டும் என்னும் முடிவு ஏற்பட்டது. இதற்குத் தப்ப முடியாது என்று அச்சு நாடுகள் தெளிவாக உணர்ந்து கொண்டன. இங்கே ஒரு விஷயம் ஊன்றி கவனிக்கத் தக்கது. "சர்ச்சில் முயற்சிகளை யொட்டியே சம்பவங்களும் நடை பெறுகின்றன."

நிற்க, அட்லாண்டிக் பிரகடனத்தை யொட்டித் தான், மாஸ்கோ தீர்மானமும் ஏற்பட்டது. இத்தீர்மானப்படி சர்வதேசப் பொது வுடமை ஸ்தாபனம் கலைக்கப்பட்டது. 1942-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் மிஸ்டர் சர்ச்சில் மாஸ்கோவிற்குப் போய் வந்த 8 மாதங்களுக்குப் பிறகு இத் தீர்மானம் நிறைவேறியது குறிப்பிடத் தக்கது. தோல்வி யடைந்த நாடுகள் இத் தீர்மானத்தின் பயனாக, பிற நாட்டார் உத்திரவுப்படிக்கின்றி தாமாகவே தம் அரசியல் விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளத் தக்க நிலைமை ஏற்பட இடமுண்டாகி விட்டது. இதன் பயனாக, நேச நாடுகளுக்குள் இருக்கும் பரஸ்பர நம்பிக்கை உயர்ந்து கொண்டு போவதுடன், கோபல்ஸின் பொய்ப் பிரசாரம் நடை பெற முடியாதபடி செய்துவிட்டது. நாஜிகள் வயப்பட்ட நாடுகளில், அவர்களுக்கு விரோதமான உணர்ச்சி பொது மக்களுக்கு உண்டாகி யிருப்பதற்குக் காரணம், போல்ஷிவிக்கர்களுடைய புரட்சி முயற்சி தான் என்று அவர்கள் கருதி வந்தது, தவறு என்பது புலானுயிற்று.

1942-ம் வருஷம் ஜூன் மாதம் இவ்விருவரும் சந்தித்த காலத்தில், இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் பெரும் ஆபத்திற்குள்ளாகி யிருந்தது. வடாப்பிரிக்காவில் எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்க வேண்டு மென்று திட்ட மிட்ட காலத்தில், ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களால் கடும் சேதம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதையும் சமாளித்துக் கொண்டு கப்பல் போக்கு வரவுகள் நடத்துவதைக் குறித்தும், கீழ்க் கோடியில் எப்படி போராட்டத்தை நடத்துவது என்பது பற்றியும் திட்ட மிட்டார்கள். இந்தத் திட்டத்தால் வெற்றி ஏற்பட்டது. இந்தியாவை இடுக்கியில் மாட்டியது போலச் சிக்க வைத்து வென்றுவிடலாமென்றும், ஸ்டாலின்கிராடையும் அலெக்சந்திரியாவையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றி விடுவார்களென்றும் ஜப்பானியர்கள் எதிர்பார்த்தனர்.

தலை சிறந்த வட ஆப்பிரிக்க வெற்றி

வடாப்பிரிக்காவில் நேச நாடுகளுக்குக் கிடைத்த வெற்றியின் பயனாக, இவர்கள் ஆசையில் மண் விழுந்தது. ரஷ்யாவும், தன் மாபெரும் எதிரியைச் சமாளித்துக் கொண்டது. இது கண்ட ஜப்பான், தான் தயாராக மஞ்சூரியாவில் வைத்திருந்த படைகளுக்கு முன்னேறிச் செல்லும்படி கட்டளை பிறப்பிக்க வில்லை. அவற்றை திரும்பவும் ஜப்பானுக்கு அழைத்துக் கொள்ளவும் இல்லை.

காசப்ளாங்கா மகாநாட்டிற்குப் பிறகு, காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் பேசியபோது அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

"நாம் செய்ய வேண்டியதைக் குறித்து இப்போது பூரணமான திட்டமொன்றை வகுத்திருக்கிறோம். எந்தெந்தப் படைகள் எங்கெங்கே போக வேண்டு மென்றும், அவை ஒவ்வொன்றிலும் இருக்க வேண்டிய எண்ணிக்கைகள் எத்தனை யென்றும், அவை ஒவ்வொன்றிற்கும் யார் யார் தலைமை வகிக்க வேண்டு மென்றும், இத்திட்டத்தில் வகுத்திருக்கிறோம். நமது ஆற்றலுக்குத் தக்கபடி அடுத்த 9 மாத காலத்தில் இத் திட்டத்தை நிறை வேற்றப் போகிறோம். இந்த 9 மாதத்திற்குள் நாம் மீண்டும் இங்கே சந்திக்க முயற்சிப்போம்."

இதன் பலனாக சாலமன் தீவுகளில் சற்று சாவதானமாகவும், மத்தியதரைக் கடல் யுத்தத்திலும் அலூஷியன் தீவுகளிலும் வெகு விரைவாகவும் வெற்றிகள் கிடைத்தன.

கோபல்ஸ் "டாஸ் ரெய்ச்" என்னும் பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :—

"இந்த நான்காவது வருஷ யுத்தத்தில் பெருங் கஷ்டத்தில் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம்."

ஆனால் டோஜோ, தன் ஜப்பானியப் பொது ஜனங்களுக்கு என்ன சொன்னார் தெரியுமா ?

"கிழக்காசிய மகா யுத்தத்தின் முதற் கட்டம் முடிந்துவிட்டது. அப்போ தெல்லாம், திடீரென்று தாக்கித் தான் பல விடங்களிலும் வெற்றி கொண்டோம். இப்போது அது நெடுங்கால யுத்தமாக மாறி விட்டது. அன்றியும் நிலைமையும் வெகுவாக மாறி விட்டது."

இப்படி அவர் பேசி வெகு நாட்களுக்குப் பிறகு, டோக்கியோ வானொலி நிலையத்திலிருந்து ஒரு ஒலி பரப்பப்பட்ட பிரசங்கத்தில் கீழ்க் கண்ட வாறு கூறப்பட்டது :—

"ஜெர்மன் மக்களைப் போல ஜப்பானிய மக்கள் அவ்வளவு கஷ்டப்படவில்லை. அது பற்றி ஜப்பானியர்கள் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த யுத்தத்தில் தாம் வெற்றி யடைந்து விடக் கூடும் என்னும் முழு நம்பிக்கை யோடு ஜெர்மானிய மக்கள் இல்லை. என்றாலும், சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு தமக்குக் கிடைத்த மகா வருந்தத் தக்க அனுபவத்தை முன்னிட்டு, எப்பாடு பட்டாவது இந்த யுத்தத்தில் வெற்றியடைய வேண்டு மென்று கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்."

பாதுகாப்புத் திட்டமும் டோஜோவும்.

இந்த மே மாதம் வாஷிங்டனில் மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் சந்தித்துப் பேசிய பிறகு, ஜப்பான் பொது மக்கள் சபையில் டோஜோ கூறியதாவது :—

"யுத்த நிலைமை மகா நெருக்கடியாகிக் கொண்டு வருகிறது. அடுத்தடுத்து நடைபெறும் போராட்டங்களும் மகா கடுமையாகவும் பயங்கரமாகவு மிருக்கின்றன. நேச நாடுகள் தம் படைகளை யெல்லாம் திரட்டித் தாக்க முயற்சிக்கும் சின்னங்கள் தென்படுகின்றன."

கீழ் நாட்டிலுள்ள நிலைமை தான் மேல் நாடுகளிலும். என்றாலும், ஜெர்மன் வானொலிப் பிரசாரம் அட்டகாசம் செய்தது. "ஐரோப்பியக் கோட்டை ஈ எறும்பு கூட உட்புக முடியாதது" என்றெல்லாம் பொய் சொல்லி மக்களை ஏமாற்றியது. இந்தப் பொய்ப் பிரசாரத்தை யொட்டியே பத்திரிகைகளும் எழுதிப் பிரசுரித்தன. ஜெர்மன் 'ரெய்ச்' (பார்லிமெண்ட்) சபையில் கூட இதே போக்கில் தான் அரசாங்கப் பிரதிநிதி கூடப் பேசினார்.

நேச நாடுகளிலுள்ள மக்கள் பேசும் மொழிகளில் அச்சு நாட்டு வானொலிப் பிரசாரம் நடைபெறுகிறது. இதில் இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் மனஸ்தாபங்கள் உண்டாவதாக அறிவிக்கிறது. கியூபெக் மகாநாட்டைப் பற்றியுங் கூட இது போலவே தான் பிரசாரம் செய்கிறது. ஆனால் ஜெர்மன் மக்களுக்குச் செய்யப்படும் ஒலி பரப்புப் பிரசாரத்தில் இப்படிச் செய்வதில்லை. இதிலிருந்து ஒரு உண்மை விளக்கமாகத் தெரிகிறது. இந்த மகா நாடுகளைக் குறித்து ஜெர்மன் மக்களுக்கு அறிவித்தால் அவர்கள் பீதி கொள்ளுவார்களென்று ஜெர்மன் அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. ஆனால், இந்த முறை செய்த பிரசாரத்தில், மார்ஷல் ஸ்டாலின் குயுபெக்கிற்குப் போகாதது பற்றி, பிரமாதப் படுத்தியது. அன்றியும் சமீபத்தில் பி.பி.சி. வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பிய மிஸ்டர் ஜேம்ஸ் பெர்கூசன் குறிப்பிட்டது போல, "மார்ஷல் ஸ்டாலின் இருந்த இடத்திலேயே தன் வேலைகளை எல்லாம் செய்யக் கூடும் ; நீங்களும்

நானும் அது போலவே செய்யலாம்" இது தான் ஜெர்மானியர்களைப் பெரிதும் வருத்திக் கொண்டிருக்கிறது. குயுபெக் மகா நாட்டில், ஜப்பானோடு கடுமையாகப் போராடி வெல்ல வேண்டு மென்றும், சீனாவிற்கு மேலும் அதிகமாக உதவியளிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது நேச நாட்டினருக்குள் இருக்கும் ஒற்றுமையைக் குறிக்கிறது. ஆனால் அச்சு நாட்டார் ஒற்றுமை எப்படியிருக்கிற தென்று சற்று கவனிப்போம். தாம் மற்ற அச்சு நாடுகளின் உதவியை எதிர் நோக்கி யிருக்கவில்லை என்று இது வரை ஜப்பான் கூறவில்லை. அப்படித் தெரிவித் திருந்தால் ஜப்பானுடைய எதிரிகளுக்கும் சற்று சமாதானமா யிருக்கும். ஆனால் யுத்த ஆரம்ப காலத்தில் டோக்கியோவில் ஜெர்மன் தூதராக விருந்தவர் ஜெனரல் யூகன் ஆட். இத்தாலியை ஜெர்மானியர்கள் எப்படித் தாம் ஆட்டுவிக்கிறபடி ஆடச் செய்தார்களோ, அது போலவே ஜப்பானையும் ஆட்டுவிக்க வேண்டு மென்று இவர் முயன்றார். இந்த முயற்சி எவ்வளவிற் கெவ்வளவு அதிகப்பட்டதோ, அவ்வளவிற் கவ்வளவு நாஜிகள் மீது ஜப்பானியர்களுக்கு வெறுப்பும் அதிகப்பட்டது. நாஜிகள் மகா கெட்டிக்காரர்களா யிருக்கலாம்; ஆனால் ஜப்பானியர்கள் 'கடவுள்கள்.' 'கடவுளின் மக்கள்.'

ஜப்பானின் அன்னிய நாட்டு மந்திரியா யிருந்த மட்சுயோகா பெர்லினுக்குப் போய் டோக்கியோவிற்குத் திரும்பிய பிறகு, இரகசியமாகக் கூறி ஒப்புக் கொண்டதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும் :—

"இன்னும் மூன்று மாதங்களில் பிரிட்டனை வென்று விடுவதாக ஹிட்லர் வாக்களித்தார். நான் டோக்கியோவிற்குத் திரும்பியவுடன், ஸ்டாலினுடனே, ஹிட்லர் ஏவுதலின் பேரில் ஒரு ஒப்பந்தம் செய்தேன். அதன்படி பரஸ்பரம் ஒருவரை யொருவர் தாக்கிக் கொள்ளுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டோம். ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கும் பொருட்டுப் போட்டிருந்த திட்டம் வெளியாகாதபடி மறைப்பதற்காகத் தான், இந்த ஒப்பந்தம் செய்யும்படி என்னைத் தூண்டினர் என்று தெரிகிறது. இனிமேல் அவர்களுடைய கையாட்களாக நாம் இருக்க மாட்டோம்."

இதிலிருந்து அச்சுநாட்டாருக்குள் எப்படிப்பட்ட ஒற்றுமை நிலவுகிற தென்று விளக்கமாகத் தெரிகிறது.

ஜப்பானில் அன்னிய நாட்டு மந்திரியா யிருந்த மசூயூக்கிதனுய் தன்னுடன் பேசிக் கொண்டிருந்த போது கீழ்க்கண்ட வாறு கூறியதாக ராபர்ட் பெல்லேர் தெரிவிக்கிறார் :—

"திடீரென்று விமானங்களில் வந்து தாக்கும் போர் முறையை ஜெர்மானியர்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். 'மெஸர்ஷ்மிட்' விமானங்கள் கட்டுவதற்காக 'ப்ளான்'களையும் கொடுத்தார்கள். ஆனால், அந்த விமானங்களை எங்கே எப்போது உபயோகிப்போம் என்பது பற்றி ஜப்பானியர்கள் தான் முடிவு கட்டுவார்கள்."

நேச நாட்டினர் கூட்டுறவு.

இத்தாலியர்களுடைய கூட்டாளிகளாகிய ஜெர்மானியர்கள் தம் தளவாடங்களுடன் ஆப்பிரிக்கப் போரிலும் சிசிலிப் போரிலும் பின் வாங்கிய பிறகு, இத்தாலியப் படைகளில் அநேகர் கைதி செய்யப்பட்டதாக அமெரிக்கப் படைகளும், கனடியப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும் அறிவிக்கின்றன.

நேச தேசப் படைகள் இத்தாலியைத் தாக்கக் கூடும் என்ற எண்ணம் உதித்த உடனே, முசோலினி ஹிட்லரைக் கண்டார். அப்போது முசோலியின் கோரிக்கைகளுக்கு ஹிட்லர் இணங்க வில்லை. அதனால் மனதுடைந்து போனார் முசோலினி. இது நேச நாடுகளின் ஒற்றுமை பலத்தினால் ஏற்பட்டதோர் நிலை. ஆறு மாதங்களுக்கு முன்னால், ஜெர்மனியை விட்டு இத்தாலி விலகிக் கொள்ளும் என்று சொன்னால், பைத்தியக்காரன் என்ற பட்டந் தான் கிடைத்திருக்கும். இத்தாலிக்கு மகா ஆபத்தான சமயத்தில் தான் இவ்விருவரும் சந்தித்தனர். ஒருவர் உடனே ஒழிந்தார். அது போலவே, பிரிட்டனுக்கு மகா ஆபத்தான காலத்தில், மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்டும் சந்தித்தனர். நட்பு விதையை அப்போது விதைத்தனர். அந்த விதையின் பலன் இப்போது அறுவடைக்கு ஆயத்தமா யிருக்கிறது.

1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதி காலை 4-மணிக்கு ஜெர்மானியர்கள் ரஷ்யாவைத் தாக்கினார்கள். இப்படித் தாக்கி 17-மணி நேரத்திற்கெல்லாம் மிஸ்டர் சர்ச்சில் ஒரு ஒலி பெருக்குப் பிரசங்கம் செய்தார். ரஷ்யாவிற்கு இங்கிலாந்து உதவும் என்று உறுதி கூறினார். அப்போது அவர் கூறியதாவது :—

"சென்ற 25 வருஷங்களாக, பொது வுடைமைத் தத்துவத்தை எப்போதும் எதிர்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். இப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையில் இந்த வெறுப்பு அடியோடு மறைந்து விடுகிறது. ரஷ்யாவிற்கும் ரஷ்ய மக்களுக்கும் எல்லா வகைகளிலும் நம்மாலான உதவியைச் செய்வோம்."

பல வருஷங்களாக இருந்த வெறுப்பை, சந்தர்ப்பத்தை யொட்டி, தன் ராஜ தந்திரத்தினால் வென்று, பரிபூரணமாக ரஷ்யா வோடு ஒத்துழைப்பதாக மிஸ்டர் சர்ச்சில் வாக்களித்தார். இது சரித்திர சம்பந்தமான முக்கியத்துவம் உடையதாகும், ஏனென்றால், இப்போது எதிர் பார்க்கப்படுகிற நேச நாட்டு வெற்றிக்கு இது தான் முக்கியமான காரணமாகும்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

அவர்கள் இப்படி சொல்லுவதற்காக அவர்கள் மீது நான் குற்றம் கூறவில்லை. ஆயினும் நம்முடைய ராணுவ திட்டத்தைப் பற்றி, அவர்கள் இருதய பூர்வமாக எந்தவிதமான குற்றத்தையும் சாட்டமுடியாது. ஒரு யுத்த முனையை சூன்யமாக்குவது, அதை ஏற்படுத்துவதைவிட சுலபம். ஒரு சமயத்தில், பிரான்ஸிலே நமக்கு ஒரு நல்ல யுத்தமுனை இருந்தது. அது சின்னபின்னமாகிவிட்டது.

பிரிட்டனையும் அமெரிக்காவையும் சேர்ந்த படைகள் பெருவாரியான அளவில் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து ஜெர்மன் படைகளோடு நெருங்கி யுத்தம் புரியும் நாளை நான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். இது எப்போது ஏற்படலாம். சீக்கிரத்தில் நடக்குமா, நாளாகுமா என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள் என்னிடமிருந்து தகவல் எதிர்பார்க்கக்கூடாது. அத்தாக்குதல் நடக்கும்போது, வெற்றி அதிக நிச்சயமடைந்திருப்பதையும் நம் சோல்ஜர்கள் நல்ல ராணுவ திட்டங்களின்பேரில்தான் போர்முனைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என்பதையும் உணர்வீர்கள். இக்காரணங்களுக்குத் தான் ராணுவ நிலைமை இப்படி இருந்து வருகிறதே ஒழிய, அரசியல் நோக்கம் எதுவும் இதில் கிடையாது.

கூட்டு ராணுவ தளபதிகளின் கீழ் நடை பெற்று வரும் பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவத் திட்டம் தான் அனுஷ்டானத்துக்கேற்ற மிகச் சிறந்த திட்டம். இதைப்பற்றி ஐக்கிய நாடுகளே தீர்ப்பளிக்கும்படி நான் விடுகிறேன்.

3-வது போர்முனை

என்னைப் பொறுத்தமட்டில் 2-வது யுத்த முனையுடன் 3-வது முனையைப் பற்றியும் நான் யோசித்து வருகிறேன். 2 கைகளாலும் சண்டை போடுகிற குத்துச் சண்டை பயில்வான் மாதிரி, மேற்கத்தி ஜனநாயக நாடுகள் விளங்க வேண்டும் என்று தான் நான் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ரூஸ்வெல்டும், மன்னர் சார்பாக நானும் போட்ட திட்டத்தின் பலனாக, வட ஆப்ரிக்காவில் பல திசைகளிலிருந்து போராட்டங்கள் நடத்தப் பட்டன. இந்த முனை ரஷ்யாவுக்கு மட்டுமின்றி எல்லா ஐக்ய நாடுகளுக்குமே ரொம்ப ஜீவநாடியான தென்று பிற்காலங்களில் கருதப்படும்.

ஜப்பான் மீது தாக்குதல்

க்யூபெக் மகாநாட்டில் முக்யமாக ஜப்பான் மீது நடக்கும் யுத்தத்தை மும்முரமாக்குவது பற்றித் தான் பேசப்பட்டது என்று நான் ஏற்கனவே சொன்னேன். அமெரிக்காவின் பிரதான படைகளும், ஆஸ்டிரேலியா, நியூஜீலந்து ஆகியவைகளின் துருப்புகளும், பஸிபிக்கில் வெற்றிகரமாக போர் நடத்தி வருகின்றன. ஜப்பானுக்கு எதிராய் பிரிட்டனுக்கு உள்ள பிரதான பொறுப்புகள் தற்போதைக்கு இந்திய முனையிலும் இந்து மகா சமுத்திரத்திலுமே இருக்கின்றன. வட மேற்கு ஆப்பிரிக்காவில் வெற்றிகரமாக நடந்தேறியதுபோல இங்கும் ஆங்கிலோ-அமெரிக்க சேனாதிபதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். தென் கிழக்கு ஆசியப் போர்முனைக்கு சேனாதிபதி நியமிக்கப்பட்டு விட்டார். அவர் சியாங் கே ஷேக்குடன் சேர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்வார்.

மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் வாழ்த்து

கீழ்க் கண்ட செய்தியை மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் தன் 'கிண்டி' மாளிகையி லிருந்து ஆகஸ்ட்டு மாதம் 26-ம்தேதி அனுப்பி யிருக்கிறார்கள் :—

யுத்த சஞ்சிகையின் இந்த இதழுக்கு ஒரு செய்தி யனுப்புமாறு என்னைக் கோரினார்கள். யுத்தத்தின் ஐந்தாவது வருஷ ஆரம்பத்தை இது குறிக்கிறது.

சென்ற நான்கு வருஷங்களில் பல தோல்விகளுக்கு நாம் உள்ளாக நேர்ந்தது. கடுமையான எதிரிகளை அடிக்கடி நாம் சமாளித்துக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது. இப்படியே, அந்த அக்கிரமக்காரர்களோடு போராடி வெல்லத் தக்க பெரும் படைகளை நாமும் நேச நாடுகளும் அமைத்துக் கொள்ளும் வரையிலும், சமாளித்துக் கொண்டு வந்தோம்.

தற்காப்புக்காகப் போராடிக் கொண்டிருந்த, நாம் இந்த யுத்தம் ஆரம்பித்த நான்காவது வருஷத்தில், எல்லா விடங்களிலும் அவர்களை எதிர்த்துத் தாக்கத் தக்க நிலைமைக்கு வந்து விட்டோம். நாம் இப்போது எங்கே தாக்கப் போகிறோ மென்று நம் எதிரிகள் தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற நான்கு வருஷங்களாக எதிரிகள் நம்மை எங்கே தாக்குவார்கள் என்று தெரியாமல் நாம் திகைத்துக் கொண்டிருந்தது போல், அடுத்த அடி எங்கே விழப்போகிற தென்று தெரியாமல் எதிரிகள் இப்போது திகைக்கிறார்கள்.

இந்தப் பெரும் மாறுதலால் நமக்கு அதிர்ஷ்டந் தான். என்றாலும், அதிலும் ஓரளவிற்கு ஆபத்திருக்கிறது. ஒரு வருஷத்திற்கு முன்பு நமக்கிருந்த பெருங் கஷ்டம், தோல்வி மனப்பான்மை ஆகியவற்றிற்குக் கொஞ்சமும் இடங் கொடுக்கக் கூடாதென்பது தான். ஆனால், இப்போதோ, நமக்குக் கிடைத்திருக்கிற பெரும் வெற்றிகளால், பெருமிதங் கொள்ளாமல் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

யுத்தம் இன்னும் முடிய வில்லை. கடைசியில் வெற்றி நமதே என்றாலும், இன்னும் அதை நாம் பெற வில்லை. எவ்வளவுக் கெவ்வளவு நாம் ஒன்று பட்டு, கஷ்டப்பட்டுப் பாடு படுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு விரைவில் வெற்றி கிடைக்கும்.

ஜப்பானியக் "கூட்டு முன்னேற்றத் திட்டம்" என்றால் என்ன?

கைப்பற்றிய நாடுகளைக் கொள்ளையடிப்பது தான்

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் உள்ள அடிப்படையான வேற்றுமைகள்

சீனா தன் கலை வளர்ச்சியில் தான் தன் கவனத்தைச் செலுத்தியதே தவிர, சாம்ராஜ்யத்தைக் கட்டியாள வேண்டும் என்பதில்லை. அதன் நாகரிகம் வளர்ந்தது 'எல்லோ' ஆற்றங்கரையில் தான், அங்கே வந்து குடியேறியவர்களுக்கும், அந்நிய நாடுகளிலிருந்து அங்குவந்து சேர்ந்தவர்களுக்கும் இந்த நாகரிகம் படிந்தது. சிற்சில சமயங்களில் மட்டுந்தான் சீனர்கள் இதன் பொருட்டுப் போராட நேர்ந்தது.

சென்ற 3,000 ஆண்டுகளாக, இந்தக் கலையும் நாகரிகமும் பரவின. அதன் வேகம் அந்தந்தக் காலத்திற்கேற்றபடி மாறுபட்டன. ஆனால், இவற்றை ஏற்றுக்கொண்டவர்கள் தாமதமாகவே ஏற்றுக்கொண்டார்களானாலும், பூரணமாகவே ஏற்றுக்கொண்டார்கள். சீன நாகரிகத்தைக் கொண்டிருந்த எந்த நாடும், அதைக் கைவிடவில்லை. சீனர் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த எவரும் சீனக் கலையை ஏற்றுக்கொள்ள மறுத்தது கிடையாது.

கீழைக் கோடி நாடுகளின் கலையைத் தோற்றுவித்த பெருமிதம், எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளத்தக்க சீன நிர்வாகம், சீன இலக்கியத்தின் வியாபகம் இம்மூன்றையுங் கொண்டுதான், பிற நாடுகளிலிருந்து அங்குவந்து குடியேறியவர்களையுங்கூட ஆளுந் திறமையை, சீனர்கள் பெற்றார்கள்.

விட்டுக் கொடுக்கத் தக்க அரசாங்கம்.

சீனர்கள் நிறுவியிருக்கக்கூடிய அரசாங்க முறை, விட்டுக் கொடுக்கும் தன்மையுடையது. அடிமை மக்களும் அரசாங்கத்தில் கலந்து கொள்ளத் தக்க சகிப்புத் தன்மையுள்ளது. தேசிய உடையையோ மொழியையோ நசுக்கத் தக்க எந்த முயற்சியும் செய்யப்பட்டதே கிடையாது. மதசம்மந்தமான கொடுமைகள் ஒரு போதும் கிடையாது. உள்ளூரிலேயே தம் படைகளைத் திரட்டிக் கொண்டார்கள். 1368-ம் வருஷம் மிங் வெற்றிக்குப் பிறகு, சீனாவில் அந்நிய நாட்டுப் படைகள் எதுவும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததே கிடையாது. சமாதானத்தைக் காப்பாற்றுவது, வரி வசூலிப்பது (சீனர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரே முறைப்படி தான் வரி விதிக்கப்பட்டது) நீர்ப்பாசனம் முதலிய பொது மராமத்து வேலைகளைச் செய்வது ஆகியவைதான் தம் கடமைகள் என்று சீன அரசாங்கத்தார் கருதியிருந்தனர்.

சீன-ஜப்பானியர்களின் வேற்றுமை.

சீனாவின் இந்தப் போக்கு, அறிஞர்களைத் தோற்றுவித்தது. சீனாவில் கருணையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை ஏற்பட்டது. ஆனால், அதற்கருகிலுள்ள ஜப்பானில் உள்ள ஆட்சி முறைக்கும் இதற்கும் மிகுந்த வேற்றுமையுண்டு. ஜப்பானின் அரசியல் அமைப்பு ஒழுக்கத்தையடிப்படையாகக் கொண்டதல்ல. அங்குள்ள மன்னவர்கள் பரம்பரை மன்னர்கள். அவர்கள் 'தெய்வீக உரிமை' கொண்டவர்கள். ஆனால், ஆளத் தகுந்தவர்கள் என்னும் காரணம் பற்றி, கடவுளாலேயே அவர்கள் நியமிக்கப்பட்டவர்களல்ல, சீனர்கள் தம் சக்கரவர்த்தியை, தந்தையாகவும், சீலமே உருவானவராகவும் கொண்டாடுகிறார்கள். ஆனால் ஜப்பானியர்களோ, உலகில் தோன்றிய கடவுளாகவே தம் சக்கரவர்த்தியைக் கொண்டாடுகிறார்கள். சீனச் சக்கரவர்த்தி, தன் கடமையை சரிவர செய்யாவிட்டால், அவரது ஆட்சிமுறையை எதிர்த்துப் புரட்சி செய்யவுங்கூட, சீன அரசியல் அமைப்பு இடங்கொடுத்தது. பொது மக்களுக்கு நன்மை தரத்தக்க முறையில் சர்வாதிகாரம் செலுத்தவும் சக்கிரவர்த்திக்கு அனுமதி யளித்தது. ஆனால் தம் கடமைகளை நிறைவேற்ற சக்கரவர்த்தி தவறினால், அவரை நீக்கிவிட்டு வேறொருவரைப் பதவி ஏற்கும்படி செய்யவும் பொது மக்களுக்கு அதிகாரமிருந்தது.

"மன்த்" என்னும் பத்திரிகையில் மிஸ்டர் பீடர் ஜான்சன் சீனாவிற்கும் ஜப்பானுக்கும் உள்ள வேற்றுமைகளைக் குறித்துத் தெளிவாக எழுதியிருக்கிறார். அதில் கீழ்க்கண்ட விவரங்கள் காணப்படுகின்றன.

> ஜப்பானியர்கள் தம் சக்கரவர்த்தியைக் கடவுளின் அவதாரமாகவே மதிக்கிறார்கள். அவரை அப்பதவியினின்று இதுவரை நீக்கியதே கிடையாது. உண்மையிலேயே அரசியல் நிர்வாகமெல்லாம் பழமை தொட்டு, பரம்பரையாக 'ஷோகுன்' என்னும் உத்தியோகஸ்தரால் தான் நடைபெற்று வந்தது. இவர் அரண்மனை மேயர். ஷிண்டோ மதத்தை மீண்டும் 18-ம் நூற்றாண்டில் புதுப்பித்தபோது இந்த மேயர்களுக்கு விரோதமாக ஒரு புரட்சி கிளம்பியது. அதற்குப் பிறகு சக்கரவர்த்தியே ஆட்சியை மேற்கொண்டார். அதுவும் ஆபத்தாகத் தானிருந்தது. உயிருள்ள கடவுளாகவே தம் சக்கரவர்த்தியை ஜப்பானியர்கள் மதித்துப் போற்றுகிறார்கள். அப்படியானால், ஜப்பானியர் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளில் அவர் ஆட்சி செலுத்துவது பற்றி கேட்க, யாராலும் முடியாது. அவருடைய அதிகாரத்தை எதிர்த்துப் புரட்சி செய்வது கடவுள் விரோதமாகக் கருதப்படும். தாம் சூரியனுடைய சந்ததியைச் சேர்ந்தவர்கள் என்று ஜப்பானியர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உலகம் முழுவதையும் கட்டியாள வேண்டுமென்பதுதான் அவர்களுடைய நோக்கம். "உலக முழுதும் ஒரு (ஜப்பானிய) குடைக் கீழ்" என்பதுதான் அவர்களுடைய கொள்கை.

பலவகைப்பட்ட முறைகள்.

சீனர்களும் ஜப்பானியர்களும் மற்ற நாட்டவர்களோடு எந்த முறையில் பழகுகிறார்கள் என்பதுபற்றி, கவனித்தால் நாகரிக மக்களுக்கும் அநாகரிக மக்களுக்கும் உள்ள வேற்றுமை நன்கு விளங்கும். தம் கலைகளைத் தாமாகவே பிறர் உணர்ந்துகொள்ளும்படி சீனர்கள் விட்டுவிட்டார்களே யொழிய, பிறர் கற்றுக்கொள்ளத் தான் வேண்டுமென்று வற்புறுத்தியதே கிடையாது. தம் நாகரிகத்தின் பழமையையும் பெருமையையும் அவர்கள் நன்கு தெரிந்துகொண்டிருந்தார்கள். ஆகவே மற்றவர்களும் இதைப் பின்பற்றக் கூடுமென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. மஞ்சு சக்கரவர்த்தி 'தியன் லங்' அனுப்பிய ஒரு செய்தி இதை நன்கு விளக்குகிறது. பேராசையினாலும் யுத்தத்தினாலும் தம் நாகரிகத்தைப் பரவச் செய்ய சீனர்கள் ஒரு போதும் முயன்றதில்லை.

சமாதான மக்கள்.

அவர்களுடைய தன்மையில் எவ்விதமான அடிப்படையான மாறுதலும் கிடையாது. தம் நாட்டைக் காப்பாற்றும் பொருட்டு, முழுமனதோடு போராடி வெற்றிபெறக் கூடியவர்கள் என்று மெய்ப்பித்துக்கொண்டார்கள். ஆனால் தம் நாட்டு மக்கள் சமாதானமாக வாழவும், புதிய முறையில் தம் விவசாயத்தையும் கல்வியையும், கைத்தொழிலையும் வகுத்துக்கொண்டு, தம் நாட்டைத் திருத்தியமைத்து கொள்வதிலே மிகவும் அக்கரை கொண்டும் இருக்கிறார்கள். இந்த யுத்தம் ஆரம்பமாவதற்குமுன்பு, ஜெர்மானியர்களைப்போலவும் ஜப்பானியர்களைப்போலவும் யுத்தத் தளவாடங்களை ஏராளமாகச் செய்து குவிப்பதில் தம் சிந்தையைச் செலுத்தவில்லை. ஆனால், விஞ்ஞானத் துறையிலும், மருத்துவத் துறையிலும், கல்வித் துறையிலும் மேனாட்டு மக்களின் அனுபவத்தைத் துணைக்கொண்டு தம் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

பெருங் கொடுமை.

ஆனால், ஜப்பானியர்களோ, தாம் வகுத்துள்ள "புதிய திட்டத்தை" கிழக்காசிய நாட்டவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த உத்தேசித்திருப்பதாக பிரகடனம் செய்திருக்கிறார்கள். அவர்களை எதிர்த்துப் போராடமுடியாத இனத்தவர்கள் ஒவ்வொருவராகத் தம்மைச் சாம்ராஜ்ய ஆட்சி 'நல'த்திற்குள்ளாக்கிக் கொண்டார்கள். தாம் மேற்கொண்டிருக்கும் இந்த வேலை, கடவுளால் தமக்கு இடப்பட்டது என்று கருதுகிறார்கள். ஆகவே, அவர்கள் வேலைகளுக்குத் தடை செய்வது ஒரு குற்றமாகக் கருதப்பட்டது. இவர்களுடைய 'கூட்டு முன்னேற்றத் திட்'த்தில் சேரும்படி கட்டாயப்படுத்தப்பட்ட மக்கள், கண்டதென்ன? பெருங் கொடுமைகள் தான். அவர்கள் சூறையாடப்பட்டனர். ஜப்பானிய சாம்ராஜ்யமே அழிந்து மண்மூடிப்போன போதிலுங்கூட, சீன நாகரிகம் மட்டும் நிலைத்திருப்பது உறுதி.

கூட்டு முன்னேற்றத் திட்டத்தின் பலாபலன்கள்.

"கிரிஸ்டியன் சயன்ஸ் மானிடர்" என்னும் பத்திரிகையில் மிஸ்டர் செல்டன் நனிபி என்பவர் எழுதியதாவது :—

> உலகோருக்கு டோக்கியோ வானொலி நிலையம் கூறியதற்கு நேர் விரோதமாக, ஜப்பானிலுள்ள உள்நாட்டுப் பிரசாரகர்கள் கூறுகிறார்கள். தாம் கைப்பற்றிய நாடுகளை எல்லையில்லாமல் சூறையாடுவதுபற்றி, கொஞ்சங்கூட வெட்கமில்லாமல் அவர்கள் பேசுகிறார்கள். உலக முழுவதையும் கட்டியாள வேண்டுமென்னும் கொள்கை, ஜப்பானிய முதல் சக்கரவர்த்தியான ஜிம்மு காலத்திலேயே ஏற்பட்டதாக தெரிகிறது. இதை ஜப்பான் மொழியில், 'ஹாக்கோ இச்சியு' என்று சொல்லுகிறார்கள். இந்தப் பதத்தின் அர்த்தம், 'சக்ரவர்த்திக்குள் உலகின் எட்டு மூலைகளும்' என்பதுதான்.
>
> ஜப்பானியர் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளிலிருந்து ஒலி பரப்பப்படும் செய்திகளைக் கொண்டு ஜப்பானியர்களின் 'கூட்டு முன்னேற்றத் திட்டம்' எந்த முறையில் வேலை செய்கிறது என்று தெளிவாக விளங்குகிறது. அந்தந்த நாடுகளிலுள்ள பொருள்களை யெல்லாம் ஏற்றிக்கொண்டு, அவற்றிற்குப் பதிலாக ஜப்பான் இராணுவ நோட்டுக்களைக் கொடுக்கிறார்கள். இவற்றை ஒப்புக்கொள்ள மறுக்கிற வியாபாரிகளுக்குச் சிறைவாசந் தவறாது. இந்தப் பொருள்களை எல்லாம் கவர்ந்து கொண்டு போகும் பொருட்டுத் தான் (மிட்ஸுபிஷி, மிட்ஸுயி முதலிய) கம்பெனிகளையும் அவற்றின் கிளைகளையும் ஸ்தாபித்திருக்கிறார்கள்.
>
> பிலிப்பைன் தீவுகளைச் சேர்ந்த மணிலா என்ற ஊரிலுள்ள வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்ட செய்தி கூறுவதாவது :—
>
> பிலிப்பினோஸ்களுக்கு அமெரிக்கர்கள் அதிக கூலி கொடுத்துக் கெடுத்து வைத்திருக்கிறார்களென்று ஜப்பானிய இராணுவ அதிகாரிகள் குறை கூறுகிறார்கள். ஆனால், அவர்களைப் பட்டினி போட்டபிறகு இப்போது ஒழுங்காக வேலைக்கு வருகிறார்கள். 24 மணி நேரமும் இப்போது வேலை செய்கிறார்கள். இப்படி உண்மையிலேயே அவர்கள் ஊக்கத்தோடு வேலை செய்கிறார்களா அல்லவா என்பதைச் சோதிக்க வேண்டி, எந்தவித அரசியல் கூட்டத்தையும் அவர்கள் கூட்டக்கூடாது என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது.

ஒழிவுக்கு முன் ஓசை

“யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே” என்பார்கள். அதேபோல் ஹிட்லரின் ஒழிவிற்கும், டோஜாவின் வீழ்ச்சிக்கும் அறிகுறியான ஓசைகள் கேட்கின்றன. அவ்வாறு ஓசைகள் கேட்ட பின் உருப்பட்டவர்கள் யாருமில்லை. ஐஸ் கட்டிகள் நிறைந்த மலை மீது நடந்து கொண்டு போகிறான் ஒருவன்; அந்தப் பனிக் கட்டிகள் மீது வெயில் பட்டு, கண்களைக் குருடாக்கும்படியான ஒளி வீசுகிறது. திடீரென பனிக் கட்டி இரண்டாகப் பிளக்கிறது. கீழே பெரிய பள்ளம் இருக்கிறது. அங்கு நிற்கும் மனுஷன் அப்புறம் தப்ப முடியுமா? அவன் கதி அதோ கதி தான். அவனைப்பற்றி, அந்தப் பனிக் கட்டிகள் கவலைப்படப் போகின்றனவா என்ன? பேசாது திரும்பவும் அந்தப் பள்ளத்தை மூடி விடப்போகின்றன.

அதே போல, ஹிட்லரும், முஸோலினியும், டோஜோவும் உலக சமாதானத்தைச் சீர் குலைக்கப் புறப்பட்டனர். அவர்களில் முஸோலினி குப்புற விழுந்து விட்டார். பாக்கி இருப்பவர்கள் ஹிட்லரும், டோஜோவும் தான். இவர்கள் இருவரது சர்வாதிகாரத்வ வெறியால், உலகத்திலே பல கஷ்டங்கள் ஏற்பட் டிருக்கின்றன. ஒன்று மில்லாது சுகமாக இருந்த இந்த நாட்டிலே, வங்கத்திலும், ஒரிஸாவிலும் பலர் பட்டினியால் மடிகின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் எல்லாம் டோஜோவும், ஹிட்லரும் தான். இந்தப் பாவத்தை அவர்கள் தான் கட்டிக் கொண்டாக வேண்டும். இதற்கு இந்த ஜன்மத்திலேயோ, அடுத்த ஜன்மத்திலோ அவர்கள் சரியான படி பதில் சொல்ல வேண்டி வரும் என்பதில் சந்தேகமே யில்லை.

இனி மேல் சமாதானம் என்ற பேச்சுப் பேச ஹிட்லராலும் முடியாது; டோஜோவாலும் முடியாது. இருவர் வாய்களுக்கும் இரும்புப் பூட்டு போடுவது போல், ‘நிபந்தனையின்றி சரணடையும் வரை நொறுக்கித் தள்ளுவோம் நாம்’ என்று சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் கூறி விட்டார்கள்.

காரியமே கண்ணாயிருக்கிறார்.

ஸ்டாலினோ வாய் திறந்து ஒன்றும் சொல்லாது காரியமே கண்ணாக இருக்கிறார். கார்க்கோப் வெற்றியைக் கொண்டாடி சில தினங்கள் கழியு முன், டாகன்ராக் என்ற முக்ய ஸ்தலத்தை ருஷ்யர்கள் பிடித்து விட்டார்கள். அதைக் குறித்துக் கொண்டாட்டம் நடத்தவும் ஸ்டாலின் உத்திரவிட்டிருக்கிறார். தினம் விடிந்தால் மாஸ்கோ நகரில் ஒரே பீரங்கி சப்த மயம் தான். நாஜி விமானங்கள் அப்படி அடிக்கடி போகின்றனவா என்று கேட்கிறீர்களா? அது தான் இல்லை. அந்த பயம் எல்லாம் தீர்ந்து எத்தனையோ நாட்களாச்சே! மாஸ்கோ அருகே செல்லவும் அந்த மானங்கெட்ட நாஜி விமானிகளுக்கு இனி முகம் உண்டா? அங்கு அவர்கள் பட்ட உதைகளை அவர்களது பேரப் பிள்ளைகள் கூட மறக்க முடியாதே!

மாஸ்கோவிலே எல்லாம் சுமுகமாக நடந்து வருகிறது. ருஷ்ய அரசாங்கம் எத்தகைய இடைஞ்சலுமின்றி அங்கு நிர்வாகம் செய்து வருகிறது. யுத்தம் முடிந்ததும், வீடற்ற ருஷ்யர்களுக்கு அங்கங்கே குடியேற ஏராளமான வீடுகள் கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ‘போன மச்சான் போனதே போல் தான். இனி திரும்பி வர மாட்டான்’ என்று தான் நாஜிகளைப் பற்றி, ருஷ்யர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம்.

ருஷ்யப் படையினர் இடுக்கித் தாக்குதல்களில் எமகாதகர்களாகி விட்டார்கள். அந்த இடுக்கிக்குள் சிக்கிக் கொண்டால், உயிரோடு தப்ப முடியாது என்பதை உணர்ந்த ஜெர்மன் சேனாதிபதிகள், சட் சட் என்று தமது படைகளைப் பின்வாங்கச் செய்துவருகிறார்கள். ஆகவே ருஷ்யர்கள் சுலபமாக, அதிகக் கஷ்டமின்றி பல ருஷ்ய நகர்களை மீட்க முடிகிறது.

நாஜி சூரர்கள் பின்வாங்கி ஓடும்பொழுது, கையை உதறிவிட்டு ஓடுகிறார்களாம். அது காரணமாக, ஏராளமான ஆயுதங்களும், பீரங்கிகளும், டாங்கிகளும் ருஷ்யர்களுக்குக் கிடைத்து வருகின்றன. தினசரி ஒரு புது இடத்தில் ருஷ்யர்கள் பாயத் தொடங்குகிறார்கள். யூக்ரேன் பிரதேச முழுவதையும் இன்னும் சில மாதங்களில் கைப்பற்றி விடலாம் என்கின்றன ருஷ்யப் பத்திரிகைகள். இனி அப்படைகள் நிற்கவே போவதில்லை. முன்னேறியவண்ணமே இருக்கப் போகின்றன. நாஜிப் படைகளும் நிற்கப் போவதில்லை. பின்வாங்கிய வண்ணமாகவே இருக்கப்போகின்றன.

காரியத்தை கெடுத்தார் ஹிட்லர்.

ஹிட்லர் தமது பூரண கவனத்தையும் ருஷ்யப் போரில் செலுத்த முடியாதபடி, காரியத்தைக் கெடுத்து விட்டுப் போய்விட்டார் முஸோலினி. போனவாரம் நாம் குறிப்பிட்டிருந்தபடியே, முஸோலினி ஹிட்லரின் இஷ்டத்திற்கு விரோதமாகவே, தான் தோன்றித்தனமாகவே, தமது சக்தி இன்னதென்று தெரியாது, ஆழத்தில் காலை விட்டுவிட்டார். அவர் பிரான்ஸை முதுகில் குத்தியதும், மடத்தனமாக கிரீஸையும், ஆல்பேனியாவையும் தாக்கினதும், எகிப்திலே கோட்டைவிட்டதும் ஹிட்லரின் அனுமதி இல்லாமல் தான் என்று இப்பொழுது தெரிகிறது. எகிப்தை வெல்ல மேற்கொண்டு புதுப்படைகளை அனுப்புவதாக ஹிட்லர் கூறியதாகவும், அலக்ஸாந்திரியாவை அடைந்து, அந் நகருக்குள் ஆடம்பரமாக நுழையவும், தமது இத்தாலியப் படைகளின் உதவியைக் கொண்டே எல்லாம் சாதித்து விட்டதாக ஜம்பமடித்துக் கொள்ளவும், முஸோலினி விரும்பியதாகவும், அந்த முயற்சியில், ‘உள்ளதும் போச்சடா நொள்ளைக்கண்ணா!’ என்ற கதையாக முடிந்ததாகவும், கடைசியாக ஹிட்லரும் முஸோவும் சந்தித்த சமயத்திலே ஆஜராக இருந்த வீனர் கிரண்டி என்பவர் கூறுகிறார். இவர் இப்பொழுது நேச நாடுகளிடம் ஏதோ பேச நடுநிலைமை நாடாக உள்ள போர்ச்சுகலை அடைந்திருக்கிறாராம்.

முஸோலினி கேட்டபொழுது இத்தாலிக்கு உதவ மறுத்த ஹிட்லர், இப்பொழுது அவசர அவசரமாக இத்தாலிக்குள் நாஜிப் படைகளைக் கொணர்ந்து குவிக்கிறாராம். ஸிஸிலியை வென்ற நேச தேசத்தார் இத்தாலி மீது நிச்சயம் பாய்வார்கள்; அவர்களை அங்கேயே சிலகாலமாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்பது ஹிட்லர் திட்டம் போலும். முதலில் உதவி மறுத்து இப்பொழுது ஆட்களைக்கொண்டு குவிப்பதிலிருந்து, முஸோலினி எப்படியாவது ஒழிந்தால் சரிதான் என்று ஹிட்லர் நினைத்திருந்தாரோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

ருஷ்யாவையும் இத்தலியையும் மட்டும் ஹிட்லர் கவனித்தால் போதுமென்று தோன்றவில்லையே! ஹிட்லர் சிரமப்பட்டுப் பிடித்த நாடுகளில் எல்லாம் ஒரே கொந்தளிப்பாக இருக்கிறதே!

பல்கேரியாவில் நிம்மதியில்லை.

அவருக்கு உதவியாக இருந்த பல்கேரிய மன்னர் போரில் சந்தேகப்படும் வகையில் மண்டையைப் போட்டுவிட்டார். இனி அந்நாட்டில் நிம்மதி இராது, உள்நாட்டுக் கலகங்கள் உண்டாகக் கூடும். பல்கேரியா முழுவதையும் ஜெர்மானிய வீரர்களைக்கொண்டு ஹிட்லர் ஆக்ரமித்துக் கொண்டுவிடலாம் என்றால், அதற்கு ஏற்ற ஆட்களுக்கு எங்கே போவது? இப்பொழுது ருஷ்யாவிலிருந்தோ, பிரான்ஸிலிருந்தோ ஆட்களைக் கொண்டுவர முடியாதே!

ருமேனியாவிலும், ஹங்கேரியிலும் காரியங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை, காற்று பலமாக வீசும் திசையோடு அவர்களும் கலந்துகொள்ளச் சித்தமாக இருக்கிறார்கள். பால்கன் பிரதேசங்களிலே கொரில்லாக்கள் பாடு ஏகக் கொண்டாட்டமாயிருக்கிறது. அவர்களுடன் எண்ணற்ற இத்தாலியர்கள் வேறே சேர்ந்துகொண்டு விட்டார்கள். ஆகவே பால்கன் பிரதேசத்திற்கு வேறே ஜெர்மன் படைகளை ஹிட்லர் அனுப்பியாக வேண்டும்.

இது இப்படி இருக்கையில், பிரான்சில் உள்ள இத்தாலியப் படைகளை படோக்ளியோ அரசாங்கத்தார் வாபீஸ் வரச் சொல்லிவிடுவார்கள் என்று தெரிகிறது. சரியாப்போச்சு! பிரான்ஸிலேயும் அமபலம்தான்! அடுத்தாப்போல், சுண்டைக்காய்போலிருந்த டென்மார்க் தேசம் பகிரங்கமாகவே ஹிட்லரை எதிர்க்கத் துணிந்துவிட்டது. ஹிட்லரின் சீடப் பிள்ளைகள் அங்கு ராணுவ ஆட்சியை அமுல்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். மரண தண்டனையும், மற்ற கெடுபிடிகளும் இத்தனை காலம் அங்கில்லை. அவற்றைப் புகுத்தவேண்டுமென நாஜிகள் விரும்பினர். ‘முடியாது’ என்றார் டென்மார்க் மன்னர்.

பலே! டென்மார்க்!

அவரையும் அவருடைய அதிகாரிகளையும் நாஜிகள் கைது செய்திருக்கிறார்களாம். பலே! டென்மார்க்! அது தான் வீரத்தனம்! அந்தச் சிறு நாட்டைச் சேர்ந்த பல கப்பல்கள் ஸ்வீடனுக்குத் தப்பி ஓடிவிட்டனவாம். வேறு சில தம்மைத்தாமே மூழ்கடித்துக்கொண்டு விட்டனவாம். இன்னும் என்னென்ன அங்கு நடக்கப்போகின்றனவோ பார்க்கவேண்டும். அடிமை வாழ்வை எத்தனை காலம்தான் சகித்திருப்பது?

இதே எண்ணம் தான் நார்வேயில் உள்ளவர்களுக்கும் எற்பட்டிருக்கிறது. நார்வே மக்கள் நாசவேலைகளில் இறங்கவே, நாஜிகள் பயந்து அங்கும் தங்கள் ‘இரும்புக்கை’ களை நீட்டத் தொடங்கிவிட்டார்கள்.

அடுத்தாற்போல உள்ள ஸ்வீடனும் துணிந்து ஹிட்லரின் முகத்தில் அடித்ததுபோல, நார்வேக்கு செல்ல வழிவிடமாட்டேன் என்று விட்டது. அதோடு, சமீபத்தில் ஜெர்மானியர் ஸ்வீடிஷ் கப்பல்களிரண்டை அமிழ்த்தியது ஏன் என்றும் மிரட்டுகின்றது.

ஸ்பெய்ன் ஹிட்லர் பாட்டுக்கள் பாடுவதில்லை.

தெற்கே ஸ்பெயினோ, இப்பொழுதெல்லாம் ஹிட்லர் பாட்டுகளைப் பாடுவதில்லை. நேசதேசத்தாரின் முகத்தை ஏறிட்டுப்பார்க்கத் தொடங்கியிருக்கிறது அது. கூடிய சீக்கிரமே பிராங்கோ, ருஷ்யாவிற்குச் சென்றுள்ள ஸ்பானியத் தொண்டர் படையைத் திரும்பி வரும்படி உத்திரவிட்டாலும் நாம் ஆச்சரியப்படமாட்டோம்.

ஹிட்லருக்கு இவை யனைத்தும் உத்சாகம் தரும் சம்பவங்கள் என்று நினைக்கிறீர்கள்? தனக்கு ஒழிவு காலம் அணுகி வருகிறதென்பதை அவர் நன்கு உணர்ந்திருப்பார். ஆனாலும் ரத்த வெறி கண்ட அவர், இந்த யுத்தத்தை லேசில் முடிய விடமாட்டார். ஜெர்மனியையே சாம்பலாக்கி விட்டுத் தான் போகப் போகிறார். அது நேச தேசத்தாரின் கைங்கரிய மாகத்தானிருக்கும். அதற்காக அவர்கள் வருந்தத் தான் செய்கிறார்கள். ஆனாலும் சும்மா இருக்க முடியாதே!

பெர்லின், விதாம்பர்க், நூரம்பர்க் போன்ற பெரிய நகரங்களைக் காலி செய்து வருகிறார்கள். பெர்லின் நகரிலே அரசாங்கக் காரியாலயங்கள் மிகுந்த தெரு, நான்கு வருடங்களுக்கு முன் போலந்து நகர்கள் அடைந்த கதியை அடைந்து விட்டன, அடுத்தாப் போல என்ன நடக்கப் போகிறது என்று நம்மைப் போலவே ஹிட்லரும் க்யூபெக் மகா நாட்டு நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்திருப்பார்.

அந்த மகா நாடு முடிந்து விட்டது. ஆனால் நடக்கப் போவதை ஹிட்லருக்குப் புரியும் பாஷையில் போர்க்களத்தில் தான் செய்கை மூலம் வெளியிடப் போகிறார்களாம். எங்கு வேண்டுமானாலும் தாக்க நேச நாட்டினர் தயாராக இருக்கிறார்களாம். தென் இத்தாலியில் உள்ள ரயில் போக்குவரத்து மார்க்கங்கள் எல்லாம் பாழாக்கப்பட்டு விட்டன. ஜெர்மன் போர் விமானங்களின் எதிர்ப்பும் ஏகமாக இருக்கிறதாம், ஆனால் நேச நாட்டினர் வட ஆபிரிகாவிலும், மற்ற இடங்களிலும் ஏராளமான விமானங்களையும், லக்ஷக் கணக்கான ஆட்களையும் குவித்து வைத்திருக்கிறார்கள். சரியானபடி கணக்கு போட்டுக் கொண்டுதானே ஸிஸிலி மீது பாய்ந்தார்கள். அதே போல், சரியான கணக்கோடு தான் ஐரோப்பாவிலும் அடி வைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

(14-ம் பக்கம் பார்க்க.)

அங்கும், இங்கும்

இந்தியரின் கடமை உணர்ச்சி

இந்த யுத்தத்திலே அதி முக்யமான பொருள்களாக இருப்பவை பெட்ரோலும், நூதன வெடிகுண்டுகளும் என்றே நினைக்கிறோம். விமானங்களில் எத்தனையோ விதங்களிருக்கின்றன. டாங்கிகளிலோ பல ரகம். மளமளவெனப் போர் முனையில் முன்னேற எண்ணற்ற லாரிகள் தேவை. காயம்பட்ட வீரர்களையும், டாங்கி, பீரங்கிகளையும் உடனே போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்தி, பின்னாலே ஆபத்து அதிகமற்ற இடத்தில் உள்ள 'ஆஸ்பத்திரி'களில் கொண்டுபோய்ச் சேர்க்க 'ஆபத் சகாய' வண்டிகள் வெகு அவசியம். இத்தனைக்கும் பெட்ரோல் இல்லாமல் ஒன்றும் நடக்காது. இதேபோல், விரோதி நாடுகள் மீது பறக்கும் விமானங்களும் சரி, நம்மீது பாயவரும் விரோதி விமானங்களை அடித்து விரட்டவென்றுள்ள சண்டை விமானங்களும் சரி, பலவித வெடிகுண்டுகளைச் சுமந்து செல்ல வேண்டியதவசியம் அல்லவா? ஒரு குண்டு போட்டாலும், அதனால் ஏற்படக்கூடிய சேதம் பிரமாதமாக இருக்க வேண்டும். சும்மா சும்மா அர்த்த மில்லாது பெட்ரோலைச் செலவழித்துக் கொண்டு விரோதிகள் இருக்குமிடத்திற்குப் போய் விட்டுவர முடியாதல்லவா? ஆகவே பெட்ரோலும், வெடி குண்டுகளும் வெகு அவசியமான பொருள்கள் என்று சொல்லுவதில் தவறு ஒன்றுமில்லையே!

பெட்ரோலின் முக்யத்வத்தை நம்மை விட, போர் முனையில் உள்ளவர்களே ரொம்பத் தெரிந்து கொண்டிருப்பார்கள். இதை, சமீபத்தில் நடந்த சம்பவமொன்று நன்றாக எடுத்துக் காட்டுகிறது:

பர்மா எல்லையிலே ஒரு நாள் திடீரென்று ஒரு பெட்ரோல் கிடங்கிலே தீப் பிடித்துக் கொண்டது. அந்த இடத்தருகே லான்ஸ் நாயக் என்ற அந்தஸ்தைப் பெற்ற ஒரு அதிகாரி இருந்தார். அவர் உடனே, பெட்ரோல் கிடங்கிலே குதித்தார். அது பள்ளமான இடமாதலால், குதித்துத் தானே ஆக வேண்டும்!

அந்தக் குழியிலே குதித்து, அங்கிருந்த பெட்ரோல் டின்களைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடலானார். தீயோ பிரமாதமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. டாம், டீம், டபார், டிபார் என்று பெட்ரோல் டின்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அந்த மனுஷர் கொஞ்சமாவது பயப்படவே இல்லை. தன்னாலான வரை ஏராளமான டின்களைக் காப்பாற்றினார். கடைசியாக, இரு டின்களைத் தூக்கிக் கொண்டு வரும் பொழுது, உஷ்ண மிகுதியால் அந்த இரு டின்களும் வெடித்து விட்டன. அதனால், அவரது கைகளில் ஏற்பட்ட காயங்களை நினைத்தாலும் மயிர்க் கூச்சலெடுக்கிறது. அப்படி யிருந்தும் அவரது முகத்தில் இருந்த புன்னகை மாறவேயில்லை. தமது கடமையை நிறை வேற்றினோம் என்ற மகிழ்ச்சி அவ்வளவு, அவருக்கு. உடனே அவரை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போக விரும்பினார்கள். 'பரவாயில்லை! பரவாயில்லை!' என்று சும்மா இருக்க முயன்றாரவர். பெரிய அதிகாரி வந்து ரொம்பக் கோபித்துக் கொண்ட பிறகே, அவர் ஆஸ்பத்திரிக்குப் போனார். அங்கேயும் ரொம்ப நாட்கள் இல்லை. காயங்கள் கொஞ்சம் ஆறினதும், திரும்பவும் தம்முடைய பட்டாளம் இருக்குமிடத்தைத் தேடிப் போய்ச் சேர்ந்து விட்டார். இவர் ஆர்.ஐ.ஏ.எஸ்.ஸி. பகுதியைச் சேர்ந்தவர். இவரைப் போல் தம் உயிரையும் லக்ஷ்யம் செய்யாது உழைக்கும் உத்தம வீரர்கள் கணக்கில்லாது இருக்கிறார்கள் நமது படைகளில். ஹிட்லரின் கட்டுப்பாடுகளை எண்ணிக் கதிகலங்கி, 'வேறுவழி இல்லையே தலை விதியே' என்று அழுது கொண்டே அரை மனதுடன் வேலை செய்யும் கோஷ்டிகளுக்கும், இவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கு முள்ள வித்தியாசம். தாமாகவே பட்டாளத்தில் சேர்ந்து, உத்சாகத்தோடு தமது பொறுப் புணர்ந்து வேலை செய்யும் இவர்களெங்கே! ஹிட்லரின் படைகளெங்கே!

காயம்பட்ட வீரர்களுக்குத் தொழிற் பயிற்சி

காரியம் ஆகிறவரை காலைப் பிடி, அப்புறம் கழுத்தைப் பிடி என்ற வியாபாரம் நியாயமான ஒரு கொள்கைக்காகப் போராடும் நேச தேசத்தவரிடம் கிடையவே கிடையாது. போர்க்களத்தில் இருக்கும் வரை கவனிப்பது, அங்கே காயம்பட்டு ஊர் திரும்புகிறவர்களைக் கண்ணெடுத்தும் பாராதிருப்பது என்கிற வழக்கமும் இங்கே கிடையாது.

போர்க்களத்திலே இருப்பவர்களுக்கு என்ன தினுசான காயம் ஏற்படும் என்று முன் கூட்டியே யாரும் சொல்ல முடியாது. கை போகும், கால் போகும். காது போகும், மூக்கு நொறுங்கும். வெடிகுண்டுகளிலிருந்து சிதறும் துண்டுகள் கண்களைப் பொட்டையாக்கும். இவ்வாறு காயப்படுகிறவர்களில், கண்ணிழந்த இந்தியர்களைக் காப்பாற்றுவதற்கென்று இந்தியாவிலே டேரா டூன் என்ற குளிர்ந்த இடத்திலே ஒரு பயிற்சி ஸ்தலத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்களாம். இங்கு செல்வதற்கு லாயக்கானவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டால், அத்தகையோரை நேரே போர்க்களத்தி லிருந்தே இந்தப் பள்ளிக்கு அனுப்பிவிட ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

இந்தப் பள்ளிகளிலே, அந்தந்த வீரர்கள் எந்தெந்த ஊரைச் சேர்ந்தவர்களோ அந்தந்த ஊர்களில் இருந்து என்ன தொழில் செய்வது சுலபமோ, அத் தொழிலில் பயிற்சி அளிக்கிறார்கள். வீடு கட்டிக் கொள்ளவும், ஏதாவது வியாபாரத்தை ஆரம்பிக்கவும் அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படும். இதற் கென்றுள்ள கமிட்டிக்கு கனம் ஸர் பிரோஸ்கான் நூன், கே.ஸி.எஸ்.ஐ., கே.ஸி.ஐ.ஈ., தான் தலைவராக இருக்கிறார்.

ஜெர்மனியின் வீண் மிரட்டல்

நல்ல இருட்டு வேளை. நட்சத்திரங்கள் மட்டுமே கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருக்கின்றன. அப்பொழுது நமது வீட்டுக்கு சற்று தூரத்திலே, எதிரில் உள்ள வெள்ளைச் சுவர் அருகே, கறுத்து உயர்ந்து ஏதோ ஒரு உருவம் இருப்பதுபோல் தெரிகிறது. அது ஒரு பிசாசு என்றே நாம் நினைத்துக் கொள்ளுகிறோம். உடனே பிசாசின் சக்தியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கும் கதைகள் எல்லாம் நினைவிற்கு வருகின்றன. ஆனால் பொழுது விடிகிறது. எதிரில் உள்ள சுவரைப் பார்க்கிறோம். 'மழை ஜலம் சுவரில் வழிந்தோடி வழிந்தோடி ஏற்பட்ட பாசியே அவ்வாறு ஒரு பைசாசத் தோற்றத்தை இருட்டு நேரத்திலே அளித்திருக்கிறது என்ற உண்மை நமக்குத் தெரிகிறது. 'பு! இவ்வளவு தானா?' என்று நாமே வாய்விட்டுச் சொல்லுகிறோம்.

இதே போல, ஜெர்மானியர்கள் எல்லாம் ஜெர்மனியின் சக்தியைப்பற்றிப் பிரமாதமாகத் தான் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஜெர்மனியை ஒரு பயலும் அசைக்க முடியாது. அது ஒரு பலமான ஐரோப்பியக் கோட்டையாகும். ஜெர்மனியின் அருகில் கூட யாரும் வரமுடியாது. அதேபோல, ஜெர்மனியின் தாக்கும் சக்தியும் மகா பயங்கரமானது. அதற்கு முன்னால் பிரமதேவன் ஆனாலும் சமாளித்து நிற்க முடியாது, என்ற எண்ணங்களை ஜெர்மனியரிடையே கொப்பல்ஸ் துரை போன்ற பிரசார நிபுணர்கள் வெகு ஜோராக விதைத்து விட்டார்கள். அந்த விதை பிரமாதமாக வேர் விட்டு விட்டது.

ஆனால், ருஷ்யர்கள்தான் ஜெர்மானியரைக் கவிந்திருந்த இருளை அகற்றினார்கள். அடே! ஜெர்மானியன் ஒன்றும் பிரமாத மில்லை. இதோ இருக்கோமடா உன்னை சாப்பிட்டு ஏப்பம் விடக்கூடிய நாங்கள், என்று ருஷ்ய வீரர்கள், சொல்லாமல் செய்கையில் காட்டி விட்டார்கள்.

இதைத் தொடர்ந்து, நேசதேச விமானங்கள், ஜெர்மனி மீதே பறந்து வந்து, ஜெர்மனிக்கு ஜீவநாடி போல் உள்ள ராணுவ முக்கியம் வாய்ந்த ஸ்தலங்களை யெல்லாம் பொடிப்பொடியாக்கி, அக்கினி பகவானுக்கு ஆனந்தத்தாண்டவ மாட அநேக சௌகரியங்கள் செய்து வைத்தன. முன்னேற்றம் என்ற வார்த்தையே காதில் விழுவது அரிதாகி விட்டது. 'நல்ல அடி! பலத்த உதை! ஒரே ஓட்டம்! ஏகச் சேதம்!' என்ற செய்திகளே போர்முனைகளிலிருந்தும், பல பெரிய நகர்களி லிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலைமையில், ஜெர்மானியரது மனோநிலை எப்படி யிருக்கும் என்று தெரிந்து கொள்ளுவது நல்லதல்லவா?

ஜெர்மன் படையைச் சேர்ந்திருந்தவர் கூறியது

சமீப காலம் வரை ஜெர்மன் படைகளோடு சேர்ந்து நின்று போராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மேற்கண்ட ரகசியத்தை உலகோர் அறிய எடுத்துக் கூறி யிருக்கிறார். இவர் ஸ்வீடன் தேசத்திலே பிறந்தவர். தம்முடைய பதினான்காவது வயதிலிருந்தே இவர், ஹாம்பர்க் என்ற ஜெர்மன் நகரத்தில் தான் வசித்து வந்தாராம். ஆகவே, யுத்தம் ஆரம்பமானபோது, தாமும் இதர ஜெர்மானியரைப் போலவே சைனியத்தில் சேர வேண்டியது தமது கடமை என்றெண்ணி, பட்டாளத்தில் சேர்ந்து விட்டாராம்.

ருஷ்யப் போர் முனையில் கிட்டத்தட்ட ஒன்றரை வருஷ காலம் இவர் இருந்தாராம். சமீபத்தில் தான் இவர் ஒரு ஸ்வீடிஷ்காரர் என்று தெரிந்ததாம். ஸ்வீடன் நடு நிலைமை நாடு அல்லவா? ஆகவே அந்த நாட்டின் பிரஜை யாருடனும் சேர்ந்து போராடுவது கூடாதல்லவா? அதனால் இவரை ஸ்வீடனுக்கு அனுப்பி விட்டார்களாம் ஜெர்மானிய அதிகாரிகள்.

'அழியா வரம் பெற்ற அமரர்கள்' தோல்வி

ரொம்ப நல்லதாகப் போச்சு. இவர் மூலமாக நமக்கு இப்பொழுது ஒரு முக்யமான விஷயம் தெரியவந்திருக்கிறது. இவர் சொல்லுகிறார்: நான்கு வருஷங்களாகத் தான் நடக்கிறது யுத்தம். ஆனாலும் ஜெர்மனியின் மன உறுதி இன்னும் குலைய வில்லை. முன் போல மட்டும் சோல்ஜர்கள் ஜெர்மனியின் சக்தியைப்பற்றிப் பிரமாதமாக நினைப்பதில்லை. சென்ற இருபது வருஷ காலமாக நாஸி போதனை இவர்களுக்கு ரொம்ப நன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது. நாஸிகள் அழியா வரம் பெற்ற அமரர்களை நிகர்த்தவர்கள் என்று எண்ணி யிருப்பவர்கள் இவர்கள். இப்பொழுதோ அந்த அபிப்பிராயம் ஆதவனைக் கண்ட பனி போல மறைந்து விட்டது. 'என்னடா எழவு யுத்தம் இப்படியே எத்தனை காலம் தான் இழுத்தடிக்கப் போகிறதோ தெரிய வில்லையே! வெற்றிபெற எத்தனையோ சான்சுகள் நமக்குக் கிடைத்தன. அப்பொழுதெல்லாம் ஏதோ ஒரு காரணத்தால் வெற்றி கிடையாது கை நழுவிப் போய் விட்டது. இனி எங்கே கிடைக்கப் போகிறது அது. ஆனால், கடைசி நிமிஷத்தில் திடீரென ஏதாவது அற்புதம் நடக்கலாம். ஜெர்மனிக்கு அப்பொழுது ஒரு திசை அடிக்கலாம்!' என்றே ஜெர்மானிய இளைஞர்கள் அடிக்கடி பேசிக்கொள்ளுகிறார்கள்.

ஜெர்மானியப் போர் வீரர்களுக்கு ஹிட்லரிடம் உள்ள மதிப்பு குறையவில்லை. ஆனால் அவர் பிரமாத வெற்றியை அடையப் போகிறார் என்று யாரும் இப்பொழுது நம்பவில்லை.

ருஷ்யரிடம் அவர்களுக்கு அசாத்திய வெறுப்பு இன்னு மிருக்கிறது. ருஷ்யர்கள் பெரிய ராக்ஷஸர்கள்; அவர்களுடைய யுத்த சாதனங்கள் மகா சக்தி வாய்ந்தவை. இந்த யுத்தத்திலேயே ருஷ்யப் போர்தான் வெகு பயங்கரமானது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. கொரில்லாக்களின் சேஷ்டைகளை அவர்களால் சகிக்கவே முடிய வில்லை.

இவ்வாறு அவர்கள் படும் மன அவஸ்தை எவ்வளவு அதிகமானாலும் 1944-ம்வருஷம் ஏப்ரல் மாதத்தோடு யுத்தம் தீர்ந்து போகும் என்கிறார்கள் சிலர். யுத்தம் தீர்ந்துபோனால், அப்புறம் அதிக அவஸ்தை இராதல்லவா?

இரண்டு அதிசய ஆயுதங்கள்

ஜெர்மானியர் புதிதாக ஏதோ இரண்டு அதிசய ஆயுதங்களைச் சிருஷ்டித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அவற்றுள் ஒன்று ஒரு வெடிகுண்டு; மற்றொன்று ஒரு நூதன விமானம்.

அந்த வெடிகுண்டு விழுந்து வெடித்தால், ஐந்து மைல் சுற்றளவிற்கு உள்ள பிரதேசங்கள் எல்லாம் பொசுங்கிப் போய் விடுகிறதாம். ரொம்ப மோசமான ஆயுதம்தான். இதை ஏன் இன்னும் ஜெர்மானியர் உபயோகப் படுத்த வில்லை என்று கேட்கிறீர்களா? அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். நேசநாடுகளின் பரப்பளவைக் கணக்கிட்டு, அவற்றிற்கு எத்தனை குண்டுகள் தேவை என்று பார்த்து அத்தனை குண்டுகளையும் மொத்தமாகத் தயாரித்துக்கொண்டு, அப்புறம் அவற்றை வீசலாம் என்று நினைத்திருக்கக் கூடும். அதனால்தான் தாமதமோ என்னமோ!

இல்லாவிட்டால் அவர்களுக்கு ஒரு பீதியும் ஏற்பட்டிருக்கலாம். ஒரு வேளை இதன் ரகசியம் எப்படியாவது வெளியாகி விட்டால், நேசதேசத்தார் இது போல் தாங்களும் தயாரித்து வந்து ஜெர்மனி மீதே போட்டுவிட்டால் என்ன செய்வது என்று அவர்கள் எண்ணி யிருக்கக்கூடுமல்லவா?

அதுவும் இல்லாவிட்டால், இத்தகைய குண்டுகளைத் தயாரித்து வைத்திருந்த இடத்தின் மீது பிரிட்டிஷ் விமானிகள் கணக்காக வேறு குண்டுகளை வீசி, நாசத்தின் அளவை அதிக சிரம மின்றி அதிகமாக்கி விட்டுப் போய்விட்டார்களோ என்னமோ!

நூதன விமானம் என்றோமே, அது ஆளில்லாமலே பறக்கிறதாம். ஜெர்மனியிலே உள்ள ரேடியோ நிலையம் ஒன்றி லிருந்துகொண்டே அதனை ஓட்ட முடிகிறதாம். எந்த இடத்தில் இறக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அங்கே இறக்கிவிடலாமாம் அதை. அதிலே வெடிகுண்டுகளையும், பீரங்கிகளையும் நிரப்பி யிருக்கிறார்களோ என்னமோ? வழியிலே அந்த விமானம் நமது விமானிகளால் நொறுக்கப்படாமலிருந்தால்தானே, இந்தக் கதை எல்லாம். தவிர, ஜெர்மனியிலே விமானிகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது என்பதையும் இது காட்டுகிறது. கொயரிங்கின் விமானப் படையின் கைதான் ஓய்ந்துபோய் விட்டதே! இப்பொழுது நேசதேசத்தார் கை அல்லவா உயர்ந்திருக்கிறது. உயர்ந்த கை இனி தணிவதற்கே சான்ஸ் இல்லை. ஆனால் ஜெர்மனியின் உயர்ந்த கை ஒடிந்து விழுவது திண்ணம்.

ஆரம்பக் கல்வியும் படைகளில் சேரும் மாணவரும்

உயர்வு தாழ்வு என்ற எண்ணந்தான் யுத்தத்திற்குக் காரணம்

[‘மெட்ராஸ் வார் ரெவ்யூ’ பத்திரிகையின் ஆசிரியருடைய வேண்டுகோளுக்கிணங்கி, சிதம்பரம் அண்ணுமலை சர்வ கலா சாலை உப அத்யட்சகர் மிஸ்டர் எச். ரத்னசாமி அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சுருக்க மொழி பெயர்ப்பு பின் வருமாறு :—]

எல்லாப் போர் அரங்கங்களிலும் இப்போது நேச நாடுகள் வெற்றி பெற ஆரம்பித் திருக்கின்றன. ஆகவே, இனி, நாம் சமாதானத்தைக் குறித்துக் கவனிக்க வேண்டும். சமாதான காலத்தில் நாட்டை எப்படி அமைத்துக் கொள்ளவேண்டு மென்பது பற்றி சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும். யுத்தம் ஆரம்பமான போது நாம் ஆயத்த மில்லாதிருந்தது போல, சமாதானம் ஏற்படுகிற போதும் ஆயத்த மில்லாதிருக்கப் படாது. யுத்தத்திற்குப் பிறகு, இந்தியா சம்பந்தப் பட்ட வரையில், பல வகைப் பிரச்சினைகளைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டி யிருக்கும். சமாதானத்தை நிலவச் செய்யும் பொருட்டு நம் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் என்ன செய்யும் என்பதும் ஒரு பிரச்சினை. இதற்குப் பிறகு யுத்தமே ஏற்படப் போவதில்லை என்று சொல்ல முடியாது. ஜப்பானைத் தோற்கடித்து விட்டால், அடுத்த பருவத்தை எதிர் நோக்கிக் கொண்டு, அது நம்மைத் தாக்கக் காத்திருக்கும். இப்படி அவர்கள் செய்யும்படி தூண்டுவது, ஜப்பான் அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கை தான். இந்தக் கொள்கையில் எந்த வித மாற்றமும் எதிர் பார்ப்பதற்கில்லை. அதன் பிறகு உடனடியாக ஜப்பான் யுத்தத்தில் இறங்காமற் போனாலும், பல முள்ள இதர எதிரிகள் இருக்கிறார்கள். ஏனென்றால், இந்தியாவில் விளையும் மூலப் பொருட்கள் அந் நாடுகளின் நாவில் ஊற்றெடுக்கச் செய்கின்றன. அந்நியர்கள் இந் நாட்டைத் தாக்காதபடி காப்பாற்றிக் கொள்ள வேண்டி யிருக்கிறது.

பாதுகாப்புப் படைகள் வேண்டும்.

ஆகையால், சமாதானம் ஏற்பட்ட பிறகு, சில வருஷங்கள் வரை, இப்போதுள்ள பாதுகாப்புப் படைகளில் பெரும் பகுதியை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் படையினர் யுத்தத்தின் பொருட்டுத் திரட்டப் பட்டவர்கள். அவர்கள் அத்தனைப் பேர்களையும் வைத்துக் கொள்ளாவிட்டாலும், பெரும்பான்மை யோராவது வைத்துக் கொள்ளப் படவேண்டும். இப்போதுள்ளதில் $\frac{3}{4}$ பங்குப் படைகளாவது சமாதானம் ஏற்பட்ட பிறகு, சில வருஷங்கள் வரை வைத்திருக்கப்பட வேண்டும். அதன் பிறகு பாதிப் பேர்களாவது நிரந்தரமாக வைத்திருக்கப்பட வேண்டும். இந்தப் படைகளில் காலியாகும் ஸ்தானங்களுக்குப் பள்ளிக்கூடங்களிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் சேர வேண்டும்.

ஆரம்பக் கல்வியின் அவசியம்.

இராணுவப் பயிற்சி காலத்தில், ஆரம்பக் கல்வி உதவ வேண்டிய அவசியமே அப்போது இல்லாமற் போய்விடும். இப்போது அதன் பொருட்டு செலவு செய்யப்படும் தொகையும் நேரமும் மிச்சமாகும். ஆரம்பக் கல்வி நன்ருகப் பரவாததினுல், கல்வி யில்லாதவர்களைப் படைகளில் இப்போது சேர்த்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது. ஆரம்பக் கல்வி சம்பந்தமாக ஊக்கத்தைப் பெருக்கவும், அரசாங்கங்களும் ஸ்தல ஸ்தாபனங்களும் இதன் பொருட்டு தாராளமாகச் செலவு செய்யவும் தூண்ட இதுவும் ஒரு காரண மாகிறது. ஆரம்பக் கல்வியில் அதிகப்படி பாடங்கள் போதிக்கப்படுவது மட்டும் போதாது. அதன் தன்மையும் உயர்ந்ததா யிருக்க வேண்டும். நமது பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்படும் படைகளில் வந்து சேருகிற பையன்கள், கிளிப் பிள்ளையைப் போல், தாம் படித்தவற்றை மட்டுமே ஒப்புவிக்கக் கூடியவர்களா யிருக்கப்படாது; ஆனுல், தம் கைகளையும் கண்களையும் அறிவையும் சரியான முறையில் உபயோகிக்கத் தக்கவர்களா யிருக்கவேண்டும். எதையும் உய்த்துணரும் பழக்கம் அவர்களுக்கு வேண்டும். தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளத் தக்க திறமையும் அவர்களுக்கு அமைந்திருக்க வேண்டும். வெளி யுலக வாழ்வில் பையன்களைப் பயிற்று விப்பதற்கு, சாரணப் படை தகுந்த தோர் சாதனமாக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக் கூடத்திலும் ஒரு சாரணப் படை யிருக்க வேண்டும். இது பற்றி பெரிதும் முன்னேற்றமடைய வேண்டி யிருக்கிறது. சென்னை மாகாணத்திலுள்ள பள்ளிக் கூடங்களில் வெகு சிலவற்றில் தான் சாரணப் படைகள் யிருக்கின்றன. பாசிச பாலிலா படையோ, நாஜி பையன் படையோ இங்கே அமைய வேண்டு மென்று நான் விரும்ப வில்லை. ஆனுல் கஷ்டங்களுக்கு அஞ்சாத மனப் பான்மை நம் பையன்களுக்கு ஏற்படவேண்டும். ஆணவமிக்க சுகவாழ்வு அவர்கள் வாழ வேண்டும். தம் நாட்டைப் பாது காக்கத் தக்க அளவிற்கு, நாட்டுப் பற்று உண்டாகத் தக்க முறையில் அவர்கள் வளர்க்கப் படவேண்டும். தன் குடும்பம், தன் இனம், தான் என்னும் தொடர்புகள் ஏற்படாத முறையில் அவர்கள் கல்வி அமைய வேண்டும். ஏனென்ருல் இவற்ருல் தான் மக்கள் பாதக மடைகிருர்கள். சமூகத்திற்கே இவற்ருல் பாதக முண்டாகிறது.

உத்தியோகப் பதவிகளுக்கு உயர்தர மாணவர்கள்.

நம் பாதுகாப்புப் படைகளில் உத்தியோகப் பதவிகளை வகிக்கக் கூடியவர்கள் உயர்தரக் கலாசாலைகளிலிருந்தும் கல்லூரிகளி லிருந்தும் தான் சேர வேண்டும். இப்படிச் சேருகிறவர்கள் கமிஷன் உத்தியோகஸ்தராகவோ, கமிஷன் பெருத உத்தியோகஸ்தராகவோ இருக்கலாம். இங்கிலாந்தில் படைகளுக்கு பள்ளிக்கூடங்களி லிருந்தே நேர் முகமாக உத்தியோகஸ்தர்களைச் சேர்த்துக் கொள்ளுகிருர்கள். அது போல் இங்கே செய்ய முடியாது. ஏனென்ருல், ஐரோப்பியப் பள்ளிக் கூடங்களில் உள்ளது போல, உணவுச் சாலை, விளையாட்டு மைதானம், விளையாட்டுச் சாதனங்கள், சாரணர் படை, ‘வாலின்டியர்’ படை முதலிய வசதிக ளெல்லாம், வெகு சில பள்ளிக்கூடங்களில் தான் இருக்கின்றன. (நாட்டின் பாதுகாப்புப் படைகளில் சேரும்படி ஊக்கும் வசதிகள் இவை.)

குறைகளை நீக்க முயற்சிப்போம்.

இரண்டாந்தரக் கல்விக் கூடங்களிலுள்ள இந்தக் குறை பாடுகளை நீக்க நாம் முயற்சிக்க வேண்டும். நிற்க, ஒவ்வொரு சர்வ கலாசாலையிலும் ஒரு சர்வ கலாசாலைப் பயிற்சிப் படையொன்று அமைய வேண்டும், அது சிறிதா யிருந்தாலும் பெரிதா யிருந்தாலும் பரவாயில்லை. இராணுவத் தலைமைக் காரியாலயத்தார் விதிக்கும் கடுமையான விதிகளுக்கு இணங்க, இப் படையினர் பயிற்சி பெற வேண்டும். படைகளுக்குத் தன் இளைஞர்களை அனுப்பும் உரிமை சென்னை மாகாணத்திற்கு வழங்கப் பட்டிருக்கிறது. இது வரை இந்தியாவின் ஒரு பகுதியிலிருந்து மட்டுந் தான் இளைஞர்களை இப்பதவிகளுக்கு எடுத்து வந்தார்கள். இந்தத் தவருன கொள்கையை இனிமேலும் இந்தியா அரசாங்கத்தார் மேற் கொள்ள மாட்டார்கள்.

இந்த யுத்தத்தின் பயனுக நம் இளைஞர்களுக்குக் கிடைக்கக் கூடியது இராணுவப் பயிற்சி மாத்திர மல்ல. இந்திய கைத் தொழில்களும் பல வகைகளிலும் விரிவடைந்திருக்கின்றன. இவை சமாதான காலத்தில் மறைந்து விடமாட்டா. இப்போதுள்ள யுத்தத் தொழிற் சாலையிலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை சமாதான காலத்தில் குறைத்துக் கொண்டு அவை வேலை செய்ய வேண்டும். அந்த இயந்திரங்களைக் கொண்டு பல வகைக் கைத் தொழில்களையும் நடத்த வேண்டும். இந்திய விமானப் படையினரின் எண்ணிக்கையை அப்போது குறைக்கும்படி நேர்ந்தால், அவர்களில் வேலை யிழக்கிறவர்களை சிவில் விமானிகளாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் முயற்சியினுல், சிவில் விமானத் தொழில் பெருக்க மடையும். இப்போது பீரங்கிகளும் துப்பாக்கிகளும் செய்ய உதவும் இரும்பும் எஃகும், சமாதான காலத்தில் சாதாரண விஷயங்களுக்கு உபயோகமாகும். தொழிற் பயிற்சி சாலைகளில் தேர்ந்த தொழில் நிபுணர்கள் இருக்கிருர்கள். யுத்தத் தொழிற் சாலைகளில் வேலை பார்க்கும் ரசாயன நிபுணர்கள் இருக்கிருர்கள். எல்லா வகை விஞ்ஞானிகளும் யுத்தத் தொழிற் சாலைகளில் அமர்ந்திருக்கிருர்கள். சமாதான காலத்திலேயுங் கூட முன்னேற்ற வேலைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்யும் பொருட்டு அவர்கள் தொடர்ந்து தம் வேலைகளைச் செய்து கொண்டுவருவார்கள். தொழில் நிபுணர்களாகத் தக்க இளைஞர்களை உயர்தரக் கல்விச் சாலைகள் உதவ வேண்டும்.

உயர்தர கல்விச்சாலைகளில் தொழில் கல்வி.

யுத்தத்திற்குப் பிறகு ஒவ்வொரு உயர்தரக் கல்விச் சாலையிலும் ஒவ்வொருதொழிற் சாலையை அமைக்க வேண்டும். அந்தக் கலாசாலை மாணவர்கள் அந்தத் தொழிற் சாலைகளில் தொழிற் கல்வி பயில வேண்டும். மாணவர்களுக்கு எந்தெந்த தொழிலில் நோக்கம் செல்லுகிறதோ, அந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ள உயர்தரக் கல்விச் சாலைகளை யடுத்து தொழிற் கல்விச் சாலைகளும் அமைந்திருக்க வேண்டும். யுத்தத்திற்குப் பிறகு விஞ்ஞானப் பயிற்சி யுள்ளவர்கள் பலர் நம் நாட்டிற்கு வேண்டி யிருக்கும். இதற்கு, நம் உயர்தரக் கல்விச் சாலைகளிலுள்ள விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகள் இன்னும் உயர்ந்த முறையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். உயர்தரக் கல்விச் சாலை மாணவர்கள் ஒவ்வொன்றையும் தாமே பரீட்சித்துக் பார்க்க வேண்டுமே யொழிய, ஆசிரியர் பரீட்சை செய்து காட்டுவதைப் பார்த்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. சர்வகலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் உள்ள விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகளும் விஞ்ஞானக் கல்வி வசதிகளும் இரண்டு மடங்கு பெருக வேண்டும். வருஷந் தோறும் சர்வகலாசாலைகளிலும், கல்லூரிகளிலும், விஞ்ஞான வகுப்புகளில் அநேக மாணவர்கள் சேர்த்துக் கொள்ள முடியாது போய் விடுகிறது. விஞ்ஞானக் கல்விக் குரிய வசதிகளை அரசாங்கமும் சர்வகலா சாலையும் அதிகப்படுத்த உதவ வேண்டும். ரசாயன நிபுணர்கள் ஏராளமாக வேண்டியிருக்கும். ஆகவே, ஒவ்வொரு கல்லூரியிலும் உள்ள ரசாயன ஆராய்ச்சி சாலையை இரண்டு மடங்கு பெரிதாக்க வேண்டும். இராணுவத்திற்கும் மற்ற தொழில்களுக்கும் விஞ்ஞானிகள் ஏராளமாகத் தேவையா யிருக்கிறது. இவர்களைத் தயார் செய்ய வேண்டிக்கூட, விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகள் அதிகப்படுத்த, இந்த யுத்தகாலத்திலுங்கூட அரசாங்கமும் சர்வகலாசாலைகளும் தவறி விட்டன. இப்போதிருந்தே இந்தியா முழுதும் விஞ்ஞானக் கல்வியைப் பெருக்க முயற்சிக்க வேண்டும்.

இந்த யுத்தத்திற்குக் காரணம் ?

சமாதான காலத்தில், கல்விச் சாலைகளில் விஞ்ஞான முன்னேற்றமும் தொழில் முன்னேற்றமுந் தான் முக்கியம் என்பதல்ல. உண்ணுவதற்காக மட்டும் மனிதன் உயிர்வாழவில்லை. உலக விஷயங்களில் மட்டும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் அக்கரை கொண்டிருந்தால், அவற்ருல் மாணவர்கள் அடையக்கூடிய பயனைப் பெற்றதாகாது. ஆகவே உள்ளுணர்ச்சியிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். உலகாய விஷயங்கள்தான் இந்த யுத்தத்திற்குக் காரணம். உலகிலுள்ள எல்லாம் தமக்குரியன வென்றும் தாமே உலகிலுள்ள மக்கள் அனைவரிலும் உயர்ந்த இனத்தவர்கள் என்னும் எண்ணமும் முசோலினிக்கும் ஹிட்லருக்கும் உண்டு. இதே ஆசை தான் அந்நாடுகளிலுள்ள மக்களுக்கும். விடுதலையுணர்ச்சி, சகிப்புத் தன்மை, நீதி, சமாதானம் ஆகியவை முன்னேற்றமடைய முடியாதபடி அவர்கள் நசுக்கித் தள்ளிவிட்டனர். இந்தியா தெய்வீகத் தன்மையுள்ள நாடு, பிறநாடுகள் உலகாயத் துறைகள் முன்னேற்றமடைந்திருப்பதைக் கண்டு தானும் அவற்றைப் போல் முன்னேற்றமடைய விரும்பி, தம் சிறந்த களஞ்சியமான தெய்வீகத் தன்மையை இழக்கக்கூடாது. பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மத போதனையைக் கட்டாயப்படுத்த வேண்டும். இந்திய இளைஞர்களின் மதக் கல்வியைத் தடைப்படுத்தக் கூடிய கல்விக் கொள்கையை அரசாங்கங்கள் மேற்கொள்ளக்கூடாது. எந்த விஷயத்தைக் குறித்தும், ஆலோசித்துப்பார்த்து விசாரணை செய்யக்கூடிய தன்மை நம் நாட்டு மாணவர்களுக்கு ஏற்படவேண்டும். நம் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் ஒற்றுமை, விடுதலை, சகிப்புத் தன்மை ஆகியவற்றை மாணவர்கள் வளர்க்கவேண்டும். இளைஞர்கள்

(14-ம் பக்கம் பார்க்க.)

யுத்த சம்பவங்கள்

1939.

செப்டெம்பர், 3—போலந்திலிருந்து ஜெர்மனி வாபீசாகி விட வேண்டும்; அப்படி வாபீசாகா விட்டால் போர் தொடுக்கப்படு மென்று பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனிக்கு அனுப்பிய இறுதிக் கடிதப்படி அது, நடந்துக் கொள்ளாததினுல் அந்த இரண்டு நாடுகளும் ஜெர்மனி மீது போர் தொடுத்தன.

17—சோவியத் படைகள் போலந்துக்குள் நுழைந்தன.

27—வார்சா சரணடைகிறது.

நவம்பர், 30—ரஷ்யா, பின்லந்தைத் தாக்குகிறது. ஹெல்சிங்கி மீது வெடி குண்டு வீச்சு.

டிசம்பர், 13—ப்ளேட் ஆற்றில் யுத்தம்.

17—ஜெர்மன் 'பாக்கெட்' போர்க் கப்பலான 'க்ராப் ஸ்பீ' மான்டிவீடியோ வரை விரட்டி யடிக்கப்பட்டது. கடைசியாக அது தானே கடலில் மூழ்கி விட்டது.

27—இந்தியப் படைகள் பிரான்சு போய்ச் சேருகின்றன.

1940.

மார்ச்சு, 12—ரஷ்யாவிற்கும் பின்லந்துக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

எப்ரல், 9—டென்மார்க்கையும் நார்வேயையும் ஜெர்மானியர்கள் தாக்குகிறார்கள்.

15—நார்வேயில் நார்விக்குக்கு அருகில், பிரிட்டிஷ் படைகள் போய் இறங்குகின்றன.

மே, 10—ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பெர்க் ஆகிய நாடுகளை ஜெர்மனி தாக்குகிறது. பிரிட்டிஷ் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் பெல்ஜியத்திற்குள் நுழைகின்றன. ஐஸ்லந்தில் பிரிட்டிஷ் படைகள் போய் இறங்குகின்றன.

மிஸ்டர் சேம்பர்லெய்ன் ராஜிநாமா, மிஸ்டர் சர்ச்சில் முதல் மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ளுகிறார்.

மே, 15—ஹாலந்து சரணடைகிறது.

28—லெப்போல்ட் அரசர் உத்திரவுப்படி பெல்ஜியப் படைகள் சாணடைகின்றன.

ஜூன், 3-4—'பிரிட்டிஷ் எக்ஸ்பெடிஷனரி' படைகள் இரவில் டன்கர்க்கிலிருந்து வாபீஸாகி வருகின்றன.

10—நார்வேயைக் காலி செய்வதாக அறிவிக்கப்படுகிறது. பிரிட்டன் மீதும் பிரான்ஸ் மீதும் இத்தாலி போர் தொடுக்கிறது.

14—ஜெர்மானிய படைகள் பாரீசுக்குள் நுழைகின்றன.

17—மார்ஷல் பெட்டெய்ன் மந்திரி சபையை அமைக்கிறார். சமாதான நிபந்தனைகள் என்ன வென்று ஜெர்மனியை பிரான்சு கோரியிருப்பதாக அவர் அறிவிக்கிறார்.

21—காம்பெய்ன் காட்டில் மார்ஷல் பாக் ரயில் வண்டியிலிருந்து கொண்டு பிரஞ்சு முக்கியஸ்தர்களிடம் ஜெர்மனியின் சமாதான நிபந்தனைகளைக் கொடுக்கிறார்.

23—'பிரிட்டன் போராடிக் கொண்டு தானிருக்கும்' என்று சர்ச்சில் கூறுகிறார்.

ஜூலை, 1—விஷிக்குத் தன் தலை நகரை மாற்றிக் கொள்ளுவதாக பிரஞ்சு மந்திராலோசனை சபை தீர்மானிக்கிறது.

ஆகஸ்ட்டு, 25—பெர்லின் மீது முதல் முதலாக பிரிட்டிஷ் வெடிகுண்டுகள் எறியப்பட்டன.

26-27—லண்டன் நகர மீது இரவு முழுதும் விமானத் தாக்குதல்கள் நடை பெற்றன.

செப்டெம்பர், 3—தமக்கு 50 நாசகாரிக் கப்பல்கள் கொடுக்கப்படுவதற்கு ஈடாக, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கு, 99 வருஷக் குத்தகைக்கு 3 பிரிட்டிஷ் கடல் தளங்களையும் விமான தளங்களையும் விடுவதாக பிரிட்டன் ஒப்புக் கொண்டது.

7-8—ஜெர்மானியர்கள் திடீர் தாக்குதல் ஆரம்பம். தேம்ஸ் நதிப் பக்கத்தில் கடுமையான விமானத் தாக்குதல். 306 பேர்கள் உயிரிழந்தனர்; 1337 பேர்கள் கடுமையாகக் காயப்பட்டனர்.

15—185 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

27—ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் ஜப்பானுக்கும் பத்து வருஷ ஒப்பந்தம் பெர்லினில் கையெழுத்தானது.

அக்டோபர், 28—இத்தாலி க்ரீஸைத் தாக்குகிறது.

நவம்பர், 11-12—டாரன்டோவை விமானப் படை தாக்குகிறது.

டிசம்பர், 9—மேற்குப் பாலைவனத் தாக்குதல் ஆரம்பிக்கிறது.

29—"ஜனநாயக நாடுகளின் தளவாட உற்பத்தி சாலையாக நம் நாடு இருக்க வேண்டு" மென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் கூறுகிறார்.

29-30—லண்டன் நகரத்திற்கே நெருப்பு வைத்துக் கொளுத்தி நாசஞ் செய்ய ஜெர்மானியர்கள் முயற்சிக்கிறார்கள்.

1941.

மார்ச்சு, 9—அல்பேனியாவை இத்தாலி தாக்குகிறது.

11—கடன் குத்தகை மசோதாவிற்கு மிஸ்டர் ரூஸ்வெல்ட் கையெழுத்திடுகிறார்.

27—ரோன் பிடிபட்டது. 4-வது, 5-வது இந்தியன் டிவிஷன் படைகள் மகா சிறந்த முறையில் போராடின.

எப்ரல், 1—மடபான் போராட்டம் நடை பெறுகிறது.

3—ரஷீத் அலி, ஈராக்கில் அச்சு நாட்டாரின் சார்பாக முயற்சிக்கிறார்.

6—க்ரீஸையும் யூகோஸ்லேவியாவையும் ஜெர்மானியர்கள் தாக்குகிறார்கள். பிரிட்டிஷ் படைகளும் சாம்ராஜ்யப் படைகளும் க்ரீசுக்கு வந்து சேருகின்றன.

13—ரஷ்யாவும் ஜப்பானும் ஒருவரை யொருவர் தாக்கிக்கொள்ளப் போவதில்லை யென்று ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார்கள்.

மே, 5—ஹெய்லி செலாசி மீண்டும் அடிஸ் அபாபாவிற்குள் நுழைகிறார்.

10—ருடால்ப் ஹெஸ் 'பாரச்சூட்' மூலம் ஸ்காட்லந்தில் வந்து இறங்குகிறார். அரசியல் கைதியாக்குகிறார்கள்.

19—அயோஸ்டா பிரபு சரணடைகிறார். இத்தாலியக் கிழக்காப்பிரிக்காவும் சரணடைகிறது.

20—க்ரீட் தீவை ஜெர்மானியர்கள் தாக்குகிறார்கள்.

24—'ஹூட்' என்னும் பிரிட்டிஷ் 'க்ரூய்சர்' கப்பலை ஜெர்மானியர்கள் வெடி வைத்து மூழ்கடித்து விடுகிறார்கள்.

27—'ஹூட்' நாசமானதற்குப் பழி வாங்கப்படுகிறது. 'பிஸ்மார்க்' என்னும் ஜெர்மன் யுத்தக் கப்பலை பிரிட்டிஷார் மூழ்கடித்து விடுகிறார்கள்.

30—ஈராக்கிய புரட்சி குலைந்தது. ரஷீத்அலி பாரசீகத்திற்குத் தப்பி ஓடுகிறார். யுத்தத்தை நிறுத்தும் சமரச ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

ஜூன், 8—சாம்ராஜ்யப் படைகளும் யதேச்சை பிரஞ்சுப் படைகளும் சிரியாவிற்குள் நுழைகின்றன.

11-12—ரூர், ரைன்லந்து பிரதேசங்களில் கடுமையான விமானத் தாக்குதல் ஆரம்பமாகிறது.

18—ஜெர்மனியும் துருக்கியும் ஒருவரை யொருவர் தாக்கிக் கொள்ளுவதில்லை யென்றும் சிநேகமா யிருக்க வேண்டு மென்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றன.

22—ஜெர்மனி சோவியத் ரஷ்யாவைத் தாக்குகிறது. ரஷ்யாவிற்குத் தான் உதவுவதாக மிஸ்டர் சர்ச்சில் அறிவித்தார்.

ஜூலை, 12—ஹிட்லருடைய ஜெர்மனிக்கு விரோதமாகப் பரஸ்பர உதவி செய்து கொள்ளுவ தென்றும், தனிப்பட்ட முறையில் யாரும் சமாதானம் செய்து கொள்ளக் கூடாதென்றும் மாஸ்கோவில் இங்கிலாந்துக்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

ஆகஸ்ட்டு, 14—வட அத்லாண்டிக் சமுத்திரத்தில் மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் சந்தித்துப் பேசுகிறார்க ளென்று மேஜர் அட்லி ஒரு ஒலி பெருக்குப் பிரசங்கம் செய்கிறார். இப்போது அட்லாண்டிக் பிரகடனம் என்று சொல்லப்படுகிற எட்டு விஷய சமரசப் பிரகடனம் வெளியாகிறது.

25—ஜெர்மன் படைகள் பாரசீகத்திற்கு வந்து சேரும்படி அனுமதிக்கக் கூடாதென்று பிரிட்டனும் சோவியத் ரஷ்யாவும் எச்சரித்திருந்ததைப் பொருட் படுத்தாதனுல், இந்த இரண்டு நாட்டுப் படைகளும் பாரசீகத்திற்குள் நுழைகின்றன.

அக்டோபர், 20—குயுபைஷேவில் ரஷ்யத் தலை நகரம் இருப்பதாக அறிக்கப்படுகிறது.

நவம்பர், 14—ஒரு 'டார்பிடோ' குண்டால் தாக்கப்பட்டு 'ஆர்க் ராயல்' என்ற பிரிட்டிஷ் போர்க் கப்பல் ஜிப்ரால்டருக்கு அப்பால் மூழ்கி விடுகிறது.

18—லிபியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய படைகள் தாக்க ஆரம்பிக்கின்றன. சிரெனெய்கா மீது எட்டாம் படை முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறது.

டிசம்பர், 7—'பெர்ல்' துறைமுகத்தையும், ஹாவாய் தீவிலுள்ள மற்ற அமெரிக்க தளங்களையும் ஜப்பானிய விமானங்கள் தாக்குகின்றன.

7-8—சயாமிலும் மலாயாவிலும் ஜப்பான் படைகள் வந்திறங்குகின்றன.

9—ஜெர்மனி மீதும் இத்தாலி மீதும் சீனு போர் தொடுக்கிறது.

10—மலாயக் கரைக்கு அப்பால் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களான "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்," "ரிபல்ஸ்" என்பவற்றை ஜப்பானிய விமானங்கள் மூழ்கடித்து விடுகின்றன.

11—அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் மீது இத்தாலியும் ஜெர்மனியும் போர் தொடுக்கின்றன.

23—வாஷிங்டனுக்கு மிஸ்டர் சர்ச்சில் போயிருக்கிறார்.

25—ஹாங்காங்கில் தண்ணீரில்லாமல், அது சரணடைகிறது.

1942.

ஜனவரி, 1—வாஷிங்டனில் அச்சு நாடுகளுக்கு விரோதமாகப் போராடுவதென்றும், தனிப்பட்ட முறையில் யாரும் எந்த அச்சு நாட்டோடும் சமரசம் செய்து கொள்ளக் கூடாதென்றும் 26 நேச நாடுகள் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றன.

11—நெதர்லந்து மேற்கிந்தியத் தீவுகளை ஜப்பான் தாக்க ஆரம்பிக்கிறது.

23—மகசார் ஜலசந்தியில், அமெரிக்க விமானப் படையும் கப்பற் படையும் டச்சு விமானப் படையும் கப்பற் படையும், ஜப்பானிய சப்ளை கப்பல்களை மூழ்கடிக்கின்றன. 15 கப்பல்கள் மூழ்கின. 22 கப்பல்கள் சேதமாயின.

பிப்ரவரி, 2—ஜெனரலாசிமோவும் ஸ்ரீமதி ஷியாங்-கெய்-ஷேக்கும் டில்லிக்கு விஜயம் செய்கிறார்கள்.

15—சிங்கப்பூர் சரணடைகிறது.

16—பத்தாம் படை அமைவதாக அறிவிக்கப்படுகிறது. ஈராக்குக்கும் பாரசீகத்திற்கும் தனிப் படைத் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மார்ச்சு, 3—ச்யூபிக் விரிகுடாவில் போய்க் கொண்டிருந்த ஜப்பானுக்குச் சொந்தமான 3 லட்சம் டன் பொருட்களையும் ஆயிரக்கணக்கான படைகளையும் மெக்கார்தருடைய படைகள் மூழ்கடித்து விடுகின்றன.

7—ரங்கூன் காலி செய்யப்படுகிறது. பிரிட்டிஷ் படைகள் வாபீசாகின்றன.

ஏப்ரல், 5—கொழும்புவை ஜப்பானியர் 75 விமானங்களைக் கொண்டு தாக்கியதில், 27 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படுகிறது.

6—இந்தியா மீது முதல் முதல் வெடி குண்டு விழுகிறது. காக்கிநாடா மீதும், விசாகப்பட்டினத்தின் மீதும் ஜப்பானியர்கள் வெடிகுண்டுகளை வீசுகிறார்கள்.

9—பட்டான் தீபகற்பத்தின் மீது அமெரிக்கப் படைகளும் பிலிப்பைன் படைகளும் தாக்குகின்றன; பிலிப்பைன் தீவு சரணடைகிறது; இந்து மகா சமுத்திரத்தில் பிரிட்டிஷ் 'க்ரூய்சர்' கப்பல்களான 'டார் செட்ஷையரும்' 'கார்ன்வாலும்' விமான மேற்றிக் கப்பலான 'ஹெர்மிசும்'ம் ஜப்பானிய பாம்பர் விமானங்களால் மூழ்கடிக்கப்பட்டன.

18—டோக்கியோ மீது அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் குண்டுகள் வீசின.

22—அமெரிக்கப் படைகள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்து விட்டதாக கர்னல் ஜான்சன் அறிவிக்கிறார்.

மே, 4—சாலமன் தீவுகளுக்கு அப்பாலும், கோரல் கடலுக்கு அப்பாலும் நடைபெற்ற விமானப் போரிலும் கடற்போரிலும் ஜப்பானியர்களை அமெரிக்கப் படையினர் நொறுக்கித் தள்ளிவிட்டனர்.

5—மடகாஸ்கரில் பிரிட்டிஷ் படைகள் போய் இறங்கின.

26—யுத்த காலத்திலும் அதற்கு பிறகுங்கூட 20 வருஷ காலத்திற்கு அமுலிலிருக்கத் தக்க ஒப்பந்தம் ஒன்றில் பிரிட்டனும் சோவியத் ரஷ்யாவும் கையெழுத்திட்டன.

30, 31—பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த 1,130 வெடி குண்டு விமானங்கள் கொலோன் நகரத்தைத் தாக்குகின்றன. அதில் 44 விமானங்கள் நஷ்டம். கொலோன் நகரத்திற்குப் பெரும் நாசம் ஏற்படுகிறது.

ஜூன், 1, 2—பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த 1,036 வெடி குண்டு விமானங்கள் எச்செனைத் தாக்கின. அவற்றில் 36 விமானங்கள் நஷ்டமாயிருக்கிறது.

5—பிரிட்டனிலிருந்து கிளம்பிய சப்ளை கப்பல்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய கப்பற் கூட்டம், இந்தியா வந்து சேர்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

18—அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கு மிஸ்டர் சர்ச்சில் போய்ச் சேர்ந்திருக்கிறார்.

25, 26—பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த 1,000 வெடி குண்டு விமானங்கள் ப்ரெமெனைத் தாக்கின. அவற்றுள் 82 விமானங்கள் சேதமாயின.

ஜூலை, 1—அலெக்சாந்திரியாவிற்கு 70 மைல்களுக்கு அப்பாலுள்ள எல் அலமின்வரை ஜெர்மன் படைகள் வந்து விட்டன.

ஆகஸ்ட்டு, 12—ஸ்டாலினோடு பேசும் பொருட்டு மிஸ்டர் சர்ச்சில் மாஸ்கோவிற்கு வந்து சேர்ந்தார்.

19—டிப்பி மீது 9 மணி நேர வெடி குண்டுத் தாக்குதல்.

31—ஸ்டாலின்கிராடுக்கு 15 மைல் தூரத்தில் ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள்.

செப்டெம்பர், 2—டச்சு வார்ப் என்னு மிடம் 8,000 பவுண்டு வெடி குண்டுகளைக் கொண்டு தாக்கப்பட்டது.

அக்டோபர், 11—குடால்கனல், சாலமன் தீவுகளில் ஜப்பானிய கடற்படையினர் வந்து இறங்க முடியாதபடி பின் வாங்கிக் கொள்ளுகின்றனர்.

23—எகிப்தில், எட்டாம் படை, போராட்டத்தைத் தொடங்குகிறது.

நவம்பர், 3—எகிப்தில் அச்சு நாட்டுப் படைகள் பின் வாங்க ஆரம்பிக்கின்றன.

5—மடகாஸ்கர் சமரச ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

8—வடாப்பிரிக்காவில் ஜெனரல் எய்சினோவர் தலைமையில் நேச நாட்டுப் படைகள் வந்திறங்குகின்றன.

நவம்பர், 13—குடால்கனல் தீவிற்கு அப்பால், ஜப்பானியப்படைகளோடு, அமெரிக்க கப்பற்படை போராடி, பின்வாங்கும்படி செய்கின்றன.

24—நியூகினியாவைச் சேர்ந்த பாப்புவாவில் பூனு என்னு மிடத்திற்கு ஆஸ்திரேலியர்கள் வந்து சேருகிறார்கள்.

27—டூலானுக்குள் ஜெர்மானியர்கள் நுழைகிறார்கள். பிரஞ்சு யுத்தக் கப்பல்களில் இருந்த படையினரே அவற்றை மூழ்கடித்துக் கொள்ளுகின்றனர்.

28—8000 பவுண்டு வெடிகுண்டுகளைக் கொண்டு டூரின் நகரத்தை பிரிட்டிஷ் விமானப்படை தாக்குகிறது.

30—குடால்கனாிலுள்ள ஜப்பானியர்களுக்கு உதவியாகக் கொண்டு வரப்பட்ட படைக் கப்பல்களோடு அமெரிக்கக் கப்பற்படை போராடி, 12 பெரிய ஜப்பான் நாசகாரிகள் (அல்லது க்ரூய்ஸர்கள்) 4 நாசகாரிகள், 2 போக்குவரவுக் கப்பல்கள், ஒரு சாமான் கப்பல் ஆகியவற்றை மூழ்கடித்தனர்.

டிசம்பர், 2—சமூகப் பாதுகாப்பு பற்றிய பிவிரிட்ஜ் அறிக்கை வெளியிடப்பட்டது.

2—பிரிட்டிஷ் படைகளும் இந்தியப் படைகளும் பர்மா எல்லையை கடக்கின்றன.

1943

ஜனவரி, 17—அச்சு நாடுகளுக்கு எதிராக ஈராக்குப் போர் தொடுக்கிறது.

23—திரிபோலியை எட்டாம்படை கைப்பற்றிவிட்டது.

26—பத்து நாட்களாக காசப்ளாங்கடவில் மிஸ்டர் சர்ச்சிலும் மிஸ்டர் ரூஸ்வெல்டும் கலந்து பேசி முடித்தனர்.

பிப்ரவரி, 2—மிஸ்டர் சர்ச்சில் துருக்கி விஜயம், அடான ஒப்பந்தம்.

3—ஸ்டாலின்கிராட் யுத்தம் முடிகிறது. ரஷ்யர்கள் வெற்றி.

9—குடால்கனலை விட்டு ஜப்பானியர் வெளி யேறுகின்றனர்.

28—மாரெத் அரணைத் துளைத்துக்கொண்டு எட்டாம்படை புகுந்து கொண்டு போகிறது.

மார்ச்சு, 4—பிஸ்மார்க் கடற்போர். ஜப்பானியக் கப்பல்கள் 22 மூழ்கடிக்கப்பட்டன.

மே, 7—ட்யூனிஸையும் பிசெர்ட்டாவையும் நேசநாட்டுப் படைகள் கைப்பற்றின.

9—அரகான் போராட்டம் முடிந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

11—அமெரிக்கப் படைகள் அட்டுத் தீவில் வந்திறங்குகின்றன.

12—துனீசியப்போர் முடிகிறது. நான்காவது இந்தியப் டபயினர் பான் ஆர்னிமைக் கைதியாக்குகிறார்கள். மிஸ்டர் சர்ச்சில் வாஷிங்டன் வந்து சேர்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

16—பிரிட்டிஷ் விமானப்படை மோணி, ஈடர் என்னும் இரண்டு அணைகளையும் உடைத்துவிட்டது.

22—எதிரிவயப்பட்ட பர்மாவிற்குள் 1,000 மைல்கள் தூரம் போய் விங்கேட்டும் அவருடைய கோஷ்டியாரும் திரும்பியதாக அறிவிக்கப்படுகிறது.

27—யாங்ட்சி ஆற்றின் வடகரையில் சீனர்கள் எதிர்த்துக் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஜூன், 10—நேசதேசப் படைகள் பன்டலேரியாவைக் கைப்பற்றிக் கொண்டன.

12—டோக்கியோ விமான தளமான கிஸ்வாவை சீனர்கள் கைப் கைப்பற்றிக்கொண்டார்கள்.

வட ஆப்பிரிக்காவிலுள்ள படைகளை மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் பார்வையிட்டார்.

ஜூலை, 1—தென்மேற்குப் பசிபிக்கில் நேசநாட்டுத் தாக்குதல்.

4—நியூகினியாவில் ஜெனரல் மெக்கார்தர் போராட்டத்தை ஆரம்பிக்கிறார்.

10—நேசநாட்டுப் படைகள் சிசிலி வந்து சேருகின்றன.

18—ரோமாபுரி மீது வெடிகுண்டு வீச்சு.

19—ஹிட்லர்-முசோலினி சந்திப்பு.

25—முசோலினி ராஜிநாமா செய்கிறார். மார்ஷல் படோக்லியோ முதன் மந்திரியாகிறார்.

30—இத்தாலிக்கு ஜெனரல் ஐசிஹோவர் சமாதான நிபந்தனைகளை அனுப்புகிறார்.

அகஸ்டு, 6—தென்மேற்கு பசிபிக்கில் முண்டா தீவு பிடிப்பட்டது.

15—அலூஷியன் பகுதியிலுள்ள கிஸ்கா தீவை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

17—மசீனு பிடிபட்டது.

18—சிசிலியை விட்டு அச்சு நாட்டினர் அடியோடு காலி செய்து விட்டனர்.

23—கார்க்கோப் நகரத்தை ரஷ்யர்கள் பிடித்தார்கள்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

கிருர்கள். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்னும் கொள்கையைப் பொது மக்களும் ஆதரிக்கிருர்கள். இப்போது இத்தாலியில் 3 லட்சம் ஜெர்மன் படைகளிருக்கின்றன வென்றும் தெரிகிறது. அந்த அரசாங்கக் கொள்கை சம்பந்தமாகப் பொது மக்கள் கவனிக்க வேண்டிய மற்றெரு முக்கியமான விஷயம் தொழிலாளர் நிலே. இது பற்றிய கருத்துக்களும் இப்போது வலுப்பெற்றிருக்கின்றன.

* * * *

இத்தாலியில் கையாள் அரசாங்கம்: பொருள் நிலேயில் குழப்பம்

இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன, 1. தாமதப் படுத்தி அவகாசம் பெறும் பொருட்டுத் தான், இத்தாலியில் ஜெர்மானியர்கள் இப்போது போர் கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள். இதன் பொருட்டுத் தான், வட இத்தாலியிலேயே இருப்பது என்று முடிவு கட்டியிருக்கிருர்கள். இத்தாலியப் மத்தியப் பகுதியையும் தென் பகுதியையும் தம் போர்த் தளங்களாக அமைத்துக் கொள்ள படோக்ளியோ அரசாங்கம் அனுமதிக்காது என்றும் தெரிகிறது. அவர் நாட்டின் நிர்வாக முழுவதையும் தன் கைக்குள் வைத்துக் கொண்டிருக்கிருர். கருத்துக்களே வெளியிடுவதைக்கூட அவர் கட்டுப் படுத்திவைத்திருக்கிருர். இதுபற்றி "ஸ்வெனிஸ்கா டக்ப்ளாடெட்" என்னும் பத்திரிகையின் பெர்லின் நிருபர் எழுதுவதாவது :—

"அரசியல் கட்சிகள் தம் பிரசாரத்தை சட்டப்படி செய்ய முடியவில்லே. முன் போலவே, பத்திரிகைகளேயும் வானெலி நிலேயங்களேயும் அரசாங்கத்தார் தம் முழு ஆதிக்கத்திற்கு உட்படுத்தியிருக்கின்றனர். இதன் பயனுக தகுந்ததோர் எதிர்ப்புக்கட்சி தோன்றுவதற்கு இடமில்லாமற் போய்விடுகிறது."

படோக்ளியோ அரசாங்கம் நிலேத்திருப்பதைக் குறித்து எத்தனேயோ வகை வதந்திகள் கிளம்புகின்றன. ஜெர்மானியர்கள் ஆட்டுவிக்கிறபடி ஆடுகிறவரான பெரினுக்சி என்பவரைத் தலேவராகக் கொண்ட தோர் பிடியாள் அரசாங்கத்தை ஜெர்மானியர்கள் அங்கே அமைக்கப் போவதாக ஒரு வதந்தி கிளம்புகிறது. கிராந்தியைத் தலேவராகக் கொண்ட கம்பாசிஸ்ட் மனேபாவமுள்ளதுமான ஒரு போலி அரசாங்கத்தை அமைக்கவும் கூடும் என்று மற்றெரு வதந்தி கூறுகிறது. முசோலினி பதவிக்கு வந்தவுடனே, மக்களே நடுங்கச் செய்து வைத்து அட்டகாசம் புரிந்தவரும் இதே கிராந்திதான்.

இவை எல்லாம் ஒரு புறமிருக்க, பொருளாதாரத் துறையில் குலேந்து விடத்தக்க நிலேமையில் இத்தாலி இன்றிருக்கிறது. சென்ற ஆகஸ்டு மாதம் 5-ம் தேதி இத்தாலிய நிதி மந்திரி இதைத் தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிருர். இத்தாலிய மக்கள் ஒவ்வொருவருக்கும் 2,000 லயர்கள் (இத்தாலிய நாணயம்) வரை காயித நோட்டுக்கள் விநியோகமாகி யிருக்கின்றன வென்றும், அவற்றிற் கேற்ற அளவிற்கு கஜாஞவில் ரொக்கமில்லே யென்று அவர் தெளிவாகத் தெரிவித்திருக்கிருர். மற்றெரு உண்மையையும் அவர் ஒப்புக் கொண்டார். இந்த யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து 4,300 கோடி லயர்கள் தான் வருஷந்தோறும் கடன் வாங்கக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு முதல் 3 வருஷங்களிலு மிருந்து, இப்போது அந்த அளவுங் கடந்து விட்டது. ஆகவே, இத்தாலி பெரும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே யுத்தத்திலிருந்து உடனடியாக விலகிக் கொண்டால் மட்டுந்தான் இத்தாலி தப்ப முடியும்.

(9-ம் பக்கம் தொடர்ச்சி.)

க்யூபெக் மகா நாட்டு முடிவாக தென் கிழக்கு ஆசியாவிற்கு தலேமை வகிக்க லூயிஸ் மவுண்ட் பாட்டன் பிரபுவை நியமித்திருக்கிருர்கள். இவர் நமது மன்னர் பிரானுக்கு நெருங்கிய பந்து. நல்ல அனுபவசாலி. இவர் பர்மா, மலேயா, சிங்கப்பூரைக் கைப்பற்ற ஏற்பாடுகள் செய்யக் கூடும். அதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. ஹிட்லரை அடிக்கும் பொழுதே ஜப்பானேயும் கவனிக்கப் போகிருர்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. பிரிட்டிஷார் இந்தியாவிருந்து தாக்க, அமெரிக்கரும், கனடியரும் பஸிபிக் பிரதேசத்தில் பாயக் கூடும். எற்கெனவே ஆஸ்திரேலியப் படைகள் நியூ ஜார்ஜியா என்ற தீவிலிருந்து ஜப்பானியரை அடுத்த தீவிற்கு விரட்டி விட்டார்கள். ஜாவாவையும் தாக்கியாயிற்று. கூடிய சீக்கிரமே இந்து மகாசமுத்திரமும், வங்காளக் குடாக் கடலும் பெரிய போர்களேக் காணக் கூடும். உலக சமாதானத்தைக் குலேத்தவர்களே ஒரேயடியாக அமுக்கி ஒழிக்கும் வரை, யாரும் ஓய்வு எடுத்துக் கொள்ளுவதில்லே.

இன்று ஸெப்டெம்பர் 3-ந் தேதி. யுத்தம் ஆரம்பமாகி நான்காண்டுகள் இன்ருேடு கழிந்து விட்டன. ஐந்தாவது ஆண்டு பிறந்து விட்டது. அதோடு, வெற்றி விரைவில் வரும் என்ற நம்பிக்கையும் பிறந்து விட்டது. இந்த நம்பிக்கையை நமக்களித்த ஆண்டவனே இன்று பிரார்த்திப்போமாக.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

தம் நாட்டுப்பற்றை மட்டும் கொண்டிருந்தால் போதாது; மக்கள் இனத்தின் பேரிலேயே பற்றுள்ளவர்களாக இருக்கவேண்டும். எல்லா நாடுகளும் ஒன்றேடொன்று இயைந்திருக்கவேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை இந்த யுத்தம் நமக்கு விளக்கமாக எடுத்துக்காட்டிவிட்டது. இப்போது ஏற்படப்போகும் சமாதானம், நிரந்தரமான சமாதானமாக விருக்க வேண்டுமானுல், இப்போதிருப்பதைவிட, அதிகமாக சர்வ தேச ஒற்றுமை ஏற்படவேண்டும். பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் சர்வ கலாசாலேகளிலும் சர்வ தேசங்களேயும் குறித்த கல்வி மிகவும் முக்கியமானதோர் பாடமாகப் போதிக்கப்படவேண்டும்.

கல்வியைக் குறித்த நம் கொள்கைகளேயும், நமது மற்ற தேசீயக் கொள்கையையும் இந்த யுத்தம் ஒரு ஆட்டம் ஆட்டிவிட்டது. என்றும் இதன் பலாபலன்கள் சமாதான காலத்தில் தோன்றமாட்டா. ஏனென்றுல், சாதாரணமாக நாம் அதை மறந்து விடுவோம். மறந்து விடுவது மனித இயற்கை. இது போன்றதோர் கலகலப்பு, இந்தியாவிற்கும் மனித இனத்திற்கும் தேவையா? அப்படியே மீண்டும் ஒரு கலகலப்பு ஏற்படுமானுலும், அது இந்த யுத்தத்தைப் போல அவ்வளவு கடுமையானதாக இருக்கக்கூடாது என்பது தான் நமது வேண்டுகோள். நம் சந்ததியாரும் யுத்தத் தொல்லேகளுக்கு ஆளாகக்கூடாது என்பது தான் நம் ஆசையுங்கூட.

கடைசி வரை போராடியே தீர வேண்டும்

சென்னை வானொலி நிலையத்திலிருந்து மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்கள் செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி ஒலி பரப்பிய பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு வருமாறு :—

இந்த உலக யுத்தத்தின் ஐந்தாவது வருஷம் இன்று ஆரம்ப மாகிறது. சென்ற நான்கு வருஷத்திய சம்பவங்களைக் குறித்து சிந்திப்போமானால், கடவுளுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். முடிவில் என்ன நேரும் என்பது பற்றிய மன உறுதி நமக்கு ஏற்படும். நமக்குப் பல பெரும் தோல்விகள் நேர்ந்தன. இந்தப் போராட்டத்தில் கொடும் எதிரிகளை வென்று அதிக பல மடையும் பொருட்டு, மிகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டி யிருந்தது. நம் எதிரிகள் இந்த யுத்தத்திற் கென்று ஆயத்தங்கள் செய்தனர். யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டிய நேரத்தையும் அவர்கள் குறிப்பிட்டு விட்டார்கள். நாம் போராட வேண்டு மென்று விரும்பியதில்லை. ஆகவே, நாம் அதற்கு ஆயத்தமா யிருக்க வில்லை. ஆகவே ஆரம்ப காலத்தில் எதிரிகள் வெற்றிகள் பெற்றதும் நாம் தோல்விகள் அடைந்ததும் பற்றி ஆச்சரியப்படவே இட மில்லை.

நாம் ரத்தத்தை வடித்தோம் ; கடுமையாக உழைத்தோம் ; கண்ணீர் சிந்தினோம் ; வியர்வையை உதிர்த்தோம். இவற்றிற்கு மிஸ்டர் சர்ச்சில் கொடுத்த ஊக்கந் தான் காரணம். கிடைக்கக் கூடிய இடங்களி லெல்லாம் நாம் வெற்றி பெற்றோம். கடுமையான நிலைமைகளை யெல்லாம் சகித்துக் கொண்டிருந்தோம். எங்கேனும் நாம் விட்டுக் கொடுக்கும்படி நேர்ந்தால் எதிரிகளுக்கு ஏராளமான சேதத்தை விளைத்த பிறகு தான், எதிரிகளுக்கு வெற்றி கிடைக்கும்படி விட்டுக் கொடுத்தோம். எது எப்படி யிருந்தாலும், நம் நம்பிக்கையை மட்டும் நாம் இழந்து விட்டதே கிடையாது.

இப்போது நிலைமை மாறி விட்டது. ஆரம்பத்தின் முடிவை எட்டி, அதையும் கடந்து விட்டோம். முடிவின் ஆரம்பத்தை நாம் அடைந்து விட்டோமோ இல்லையா வென்று இப்போது நாம் கவனிக்கலாம்.

அன்றும் இன்றும்.

ஒரு வருஷத்திற்கு முன்பு இருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமையையும் ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு வருஷத்திற்கு முன்பு நம் எதிரி மத்தியதரைக் கடலில் அலெக்சாந்திரியாவிற்குப் போகும் வழியி லிருந்தான். ஆகவே, இஜிப்ட், சூயெஸ் கால்வாய் இவற்றிற்கும் ஆபத்து ஏற்பட்டிருந்தது. இந்தியாவிற்கும் மத்திய கிழக்குப் போர் முனைக்கும் இடையே இவை யிருக்கின்றன. இன்றையத் தினம் அச்சு நாட்டு சோல்ஜர் ஒருவன் கூட ஆப்பிரிக்காவில் இடையவே கிடையாது. அங்கு இருப்பவர்களான அச்சு நாட்டினர் யுத்தக் கைதிகளாக மட்டுந்தான் இருக்கின்றனர். இத்தாலிய சாம்ராஜ்யத்தின் ஒரு கஜ நிலங்கூட இப்போது அங்கே கிடையாது. முசோலி ஒழிந்தார். சிசிலியை வென்று விட்டோம். இத்தாலி நம் கருணையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு வருஷத்திற்கு முன்பு ரஷ்யாவில், ஸ்டாலின் கிராட் நகரத்தை எதிரிகள் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். காகசஸ், பாரசிகம், ஈராக் வழியாக இந்தியாவிற்கு அவர்கள் வந்து விடுவார்களோ வென்று அஞ்சத்தக்க நிலைமையி லிருந்தோம். இப்போது ஸ்டாலின் கிராடுக்கு நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பால் ரஷ்யப் படைகள் அணி வகுத்து நிற்கின்றன. இப்படிப்பட்ட தோல்வியை ஜெர்மானியர்கள் ஒரு போதும் அடைந்த தில்லை. நமது ரஷ்ய நேசர்கள் காக்கசஸ் பகுதியையும் டான் ஆற்றுப் பகுதியையும் மீண்டும் பிடித்து விட்டார்கள். மீண்டும் உக்ரேனைப் பிடிக்கும் பொருட்டு இடைவிடாது எதிரிகளை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வருஷத்திற்கு முன்னால், ஜப்பான், தன் வெற்றிச் சிகரத்தை யடைந்திருந்தது. அலூஷியன் தீவுகளின் வழியாக வட அமெரிக்காவையும், சாலமன் தீவுகள் வழியாக ஆஸ்திரேலியாவையும், பர்மா வழியாக இந்தியாவையும் கைப்பற்றி விடுமோ என்று அஞ்சத்தக்கதா யிருந்தது நிலைமை. சாலமன் தீவுகளில் ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவிற்கு படிப்படியாக நேச நாட்டுப் படைகள் ஜப்பானியப் படைகளை விரட்டின. ஆஸ்திரேலியாவிற்கு நேர விருந்த ஆபத்தான நிலைமை மாறி, ஜப்பானுக்கே ஆபத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில், எல்லைப் புறத்திற்கு அப்பாலேயே எதிரிகளை நிறுத்து விட்டோம். சீனர்கள் மகா திறமையுடன் ஜப்பானியர்களுடன் போராடி அவர்களுக்கு ஓயாத தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நேச நாட்டவரின் உதவி சீனர்களுக்கு படிப்படியாக அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது.

ஒரு வருஷத்திற்கு முன்.

ஒரு வருஷத்திற்கு முன்பு, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், எதிரிகள் தாக்கக்கூடிய நிலையிலிருந்தார்கள். நாம் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய நிலையிலிருந்து வந்தோம். இப்போது நிலைமை தலை கீழாக மாறிவிட்டது. நாம் தான் இப்போது தாக்கக் கூடிய நிலைமையி லிருக்கிறோம். எதிரி திகைக்கிறான். அடுத்தாற் போல் நம்மை எங்கே தாக்குவார்கள் என்று சென்ற நான்கு வருஷங்களாக நாம் திகைத்துக் கொண்டிருந்தது போலவே, இப்போது அவர்கள் திகைக்கிறார்கள்.

இப்போதுள்ள நிலைமை யோடு ஒரு வருஷத்திற்கு முன்பு நாமிருந்த நிலைமையை ஒப்பிடும் போது, இதன் பலாபலன் என்னகும் என்பது பற்றி ஓரளவிற்குத் தான் மன உறுதி கொள்ளக் கூடியவர்களா யிருக்கிறோம்.

அதே சமயத்தில், மிஸ்டர் சர்ச்சில் கூறியது போல, இப்போது நமக்குச் சாதகமாயுள்ள நிலைமை காரணமாக நம் முயற்சியைத் தளரவிடக் கூடாது.

யுத்தம் இன்னும் முடியவில்லை ; வெற்றி இன்னும் நமக்குக் கிடைத்து விடவில்லை. நாம் ஒற்றுமைப் பட்டிருந்தால், காலையில் சூரியன் உதிப்பது எப்படி உறுதியோ, அவ்வளவு உறுதி நாம் வெற்றி யடைவதும். ஆனால் கடைசிவரை இந்த யுத்தத்தை நடத்தியே தீரவேண்டும். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் இராணுவங்களை இனி தலைதூக்க முடியாதபடி அவற்றை நசுக்கி விடவேண்டும்.

பழைய மகா யுத்தத்தை 1918-ம் வருஷம் வரையில் முடித்து விட்டோம். அது பெருந் தவறாக முடிந்தது. வீரர்கள் மேலும் மடியக் கூடாதே என்னும் நல்லெண்ணத்தோடு தான் நாம் அப்படிச் செய்தோம். நாம் அப்போது செய்தது தப்பு. நாம் ஜெர்மனிக்குள் நுழைந்திருக்க வேண்டும். யுத்தம் அவர்கள் நாட்டில் நடைபெற்றால் எப்படி யிருக்கும். மற்றவர்கள் நாட்டில் நடைபெற்றால் எப்படி யிருக்குமென்று தெளிவுப் படுத்தி யிருக்கவேண்டும். நாம் அப்போதே அப்படிச் செய்திருந்தால், போராடிக் கொண்டே ஜெர்மனிக்குள் நுழைந்திருந்தால், இப்போது யுத்தம் நடக்க வேண்டி யிருந்திருக்காது என்பது தான் என்னுடைய உறுதியான நம்பிக்கை. மீண்டும் அப்படிப்பட்ட தவறை நாம் செய்யக் கூடாது. இன்னும் 25 அல்லது 30 வருஷங்களுக்குப் பிறகு, மற்றொரு யுத்தம் ஏற்படுவதற்கு இடங்கொடுக்க கூடாது. நாம் ஐரோப்பாவைத் தாக்குவோம். இத்தாலியையும் ஜெர்மனியையும் அந்தந்த நாடுகளிலேயே வெல்லுவோம். ஜப்பானியர்களையும் நாம் தாக்கி அவர்களுக்குத் தகுந்த பாடங் கற்றுக் கொடுப்போம். இப்படிப்பட்ட பாடம் அவர்கள் ஒருபோதும் கற்றிருக்க மாட்டார்கள். கொடுமைகள் செய்வதனால் எந்த விதப் பலனுமில்லை என்பது தான் அந்தப் பாடம். இது பற்றி நாம் எந்த விதத்திலும் தவறக்கூடாது. இந்த யுத்தத்தைக் கடைசி வரை நாம் போராடி முடிக்கா விட்டால், நமது மக்களும், நமது பேரன்மார்களும் இன்னும் 25 அல்லது 30 வருஷங்களுக்குப் பிறகு பெரும் யுத்தம் நடத்த வேண்டிய நிலைமை கட்டாயம் ஏற்படும்.

ஆகவே, நமது முயற்சியில் தளர்ச்சியடைய மாட்டோம் என்பதுபற்றி நாம் உறுதியா யிருக்க வேண்டும். மற்றவற்றைப் போலவே யுத்தத்திலும், "யார் கொடுமைகளை வெகுவாகச் சகிக்கிறார்களோ, அவர்களுக்குத் தான் கடைசியில் வெற்றி கிடைக்கும்." கடவுளின் அருளால் வெற்றி கிடைக்கும் போது, கடைசிவரை இந்த யுத்தக் கொடுமைகளைச் சகித்தோம் என்று சொல்லக்கூடிய நிலைமையில் உண்மையிலேயே நாமிருப்போம். அகராதியிலிருந்தே 'யுத்தம்' என்ற பதத்தை நீக்கிவிடுவதற்கும், மனித இனமே இனி போரில் இறங்கா திருக்கவும் உதவக்கூடிய இந்த வெற்றியை யடையும் பொருட்டு நாமும் நம் கடமையை நிறைவேற்றினோம் என்னும் உறுதிப்பாடு நமக்கிருக்க வேண்டும்.

கஷ்டங்களைச் சகித்து மீண்டது

ஹிட்லர் ரஷ்யாவிற்கு இழைத்த கொடுமைகளைப் போல உலகத்தில் எந்த அரசாங்கமும் அனுபவித்த தில்லை. ஆனால், இத்தனையையும் ரஷ்யா சகித்தது மட்டு மன்றி, அவற்றைச் சமாளித்துக் கொண்டு, உலகத்தில் வேறெந்தப் படையும் தாக்க முடியாதபடி, ஜெர்மன் படைகளைத் தாக்கின. இதற்குக் காரணங்கள் ஸ்டாலின் மாபெருந் தலைமை ; பிரிட்டிஷ் படைகள் தனித்துப் போராடிய போது ஜெர்மானியப் படைகளைச் சமாளித்துக் கொண்டிருந்தது ; ரஷ்யாவிற்கு ஏராளமாக எல்லாவகைத் தளவாடங்களையும் இங்கிலாந்தும் அமெரிக்காவும் உதவியது.

*   *   *   *   *

மீண்டும் கிளம்பும்

எல்லாம் சரியாகிப் போகும் என்பது பற்றி நாம் உறுதியா யிருக்கலாம். யதேச்சையோடும், ஒன்று மட்டும், பிரான்சு மீண்டும் தலை தூக்கிக் கிளம்பும்.

இளைஞர் லட்சியம்

(ரெவரெண்ட் பாதர் டிசூசா ஆங்கிலத்தில் எழுதியதைத் தழுவி எழுதப்பட்டது)

உலக யுத்த சம்பந்தமாக, இளைஞர் லட்சியம் என்பது பற்றி பேசுவது பொருத்த மற்றதாகத் தோன்றலாம். இந்த லட்சத்தியத்தால், சேதப்பட நேரலாம்; சாகும்படி நேரலாம். ஏனென்றால் யுத்தத்தினால் உண்டாகும் துயரங்களெல்லாம் இளைஞர்களுடைய துயரங்கள் தான். இன்றுங் கூட இதே தான் நிலைமை. நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் யுத்தப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றனர். அன்றியும், விமானங்களிலிருந்து வெடி குண்டுகளை எறிவதனால், உள்ளூர்களிலிருந்து தளவாட உற்பத்திகளும் பிற உற்பத்திகளும் செய்கிறவர்களான ஆண்களும் பெண்களும் மடிய நேருகிறது. யுத்தத்தில் மடிகிறவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள். ஏன்? இத்தனையும் பிறர் வாழும் பொருட்டுத்தான். வீர சுவர்க்கம் தமக்குக் கிடைக்கும் என்றும் முழு நம்பிக்கையோடு தான் இவர்கள் போர்க்களம் புகுகிறார்கள். இந்தத் தியாகம் மிகவும் வருந்தத் தக்கது தான். என்றாலும் மகத்தானது, ஏனென்றால் தியாகம் செய்கிறவர்கள் இளைஞர்கள். இளைஞர்கள் நெடு நாட்கள் வாழ வேண்டியவர்களல்லவா? யுத்தத்தினால் நேரும் பொருட்சேதங்களைவிட உயிர்ச் சேதத்தைதான் நாம் பெரிதும் பொருட்படுத்தி வருந்துகிறோம்.

யுத்தத்தை ஒரு தீங்கு என்று இளைஞர்கள் மதிக்கக் கூடாது. ஏனென்றால், அதனால், நாட்டிற்கு அகௌரவம் ஏற்படும். இளைஞர்கள் தம் நாட்டைக் காப்பாற்றும் பொருட்டு உயிர் கொடுப்பார்களானால், அந்நாட்டின் வாழ்வில் தலை சிறந்த அணிகலன்களாக அவர்களுடைய புகழொளி வீசும். இதனால் அந்நாட்டிற்கு மிகச் சிறந்த பலனுண்டு. தம் நாட்டைக் காக்கும் பொருட்டு, முழுமனதோடு போர்முனைக்குப் போகும் இவ்வீரர்கள் தம்மைப் பெற்று ஊட்டிவளர்த்த தாயின் உயிரையும் பாராட்டிய தந்தையின் உயிரையும் பாதுகாக்கிறார்கள். இவர்களுடைய மரணத்தினால், இவர்களுடைய நாட்டிற்கும் குடும்பத்திற்கும் நன்மையுண்டு. இவர்களுடைய செயலால் நாகரிக வாழ்வு வேரூன்றுகிறது.

இது வரை போர் முனையின் வீரத் தனத்தைக் குறித்து பேசினோம். இளைஞர்களின் மிகச் சிறந்த திறமைகளையும் பயன்படுத்த போர் முனை சந்தர்ப்ப மளிக்கிறது. போராட்டங்களை நடத்துவதற்குப் பெரும்பாலும் இளைஞர்கள் தான் ஏற்றவர்கள்.

இப்போதுதான் இளைஞர்கள் தேவை.

இப்போது நேச நாட்டுப் படைகள் எல்லா விடங்களிலும் தாக்குவதற்குச் சித்தமா யிருக்கின்றன. ஆகவே, இத்தனை காலத்தை விட, இப்போது தான் இளைஞர்கள் ஏராளமாகத் தேவை. ஏனென்றால், ஊக்கம், தன் முயற்சி, கஷ்டங்களை சகிக்கும் தன்மை முதலியவை இளைஞர்களின் குணங்கள். ஜாக்கிரதையாகத் திட்டமிடுவது, மூலப் பொருட்களைச் சேகரிப்பது, சந்தர்ப்பங்களைத் திட்டமிடுவது முதலிய கட்டங்களை யெல்லாம் கடந்துவிட்டோம். யுத்தத்தின் ஐந்தாவது வருஷத்தில் ஜனநாயக நாட்டுப் படைகளெல்லாம் பல போர்முனைகளிலும் தாக்குவதற்கு ஆயத்தமாயிருக்கின்றன. இளைஞர்கள் தலைமை தாங்குவதற்கு இது ஏற்ற சந்தர்ப்பம். இளைஞரான லார்ட் லூயி மௌன்ட் பாட்டன் படைத்தலைவராக இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நிற்க, விமானப் படை தான் இந்த நாட்களின் யுத்தத்தின் முடிவுகளைப் குறிப்பிடத் தக்கனவாயிருக்கின்றன. இதற்கும் இளைஞர்களே ஏற்றவர்கள். இளைஞர்கள் இப்படையில் சேர ஏராளமாக வருகிறார்கள். உயரிய லட்சியமும் வீர உணர்ச்சியும் நாம் கோரும் வெற்றியைத் தர வல்லன. பூரண வெற்றி பெற நெடு நாட்கள் செல்லாது. வெற்றி கிடைத்தது. அவர்கள் தம் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் திரும்புகிற போது உங்கள் வாழ்க்கை முறையைக் குலைக்க வந்தவர்களாக நீங்கள் அவர்களைக் கருதலாமா?

சென்ற யுத்தத்திற்குப் பிறகு.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு நிகழ்ந்த குற்றம் மீண்டும் நிகழும்படி விடக்கூடாது. நம் வீரர்கள் திரும்ப தம் சொந்த ஊர்களுக்கு வரும் போது, அவர்களுக்கு வேலைகள் கொடுக்கப்படவேண்டும். படைகளில் சேருவதற்கு முன்னால் அவர்கள் என்ன வேலையிலிருந்தார்களோ, அந்த வேலையிலேயே இருந்திருந்தால் எந்தப் பதவிகளிலிப்போதிருப்பார்களோ, அந்தப் பதவிகளை அவர்களுக்கு வழங்கவேண்டும்.

இது மட்டுமல்ல. யுத்தம் முடிந்த பிறகு நேச நாடுகளெல்லாம் கூடி சமரச உடன்படிக்கைகளை வகுக்கும்படி நேரும். அப்போது நம் நாட்டின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஒவ்வொரு சிப்பாய்க்குங் கூட கொடுக்கப்பட வேண்டும். யுத்தக் கொடுமைகளை அனுபவித்தவர்களுக்குத் தான் பிறரை, குறிப்பாகத் தம்மிடம் தோல்வி யடைந்தவர்களைக் கண்ணியமாக நடத்த வேண்டிய முறை நன்கு தெரியும்.

போர் முனையிலிருந்து தம் சொந்த ஊர்களுக்குத் திரும்புகிறவர்களுக்கு ஒரு கடமை யுண்டு. யுத்தத்திற்குப் பிறகு சட்டங்கள் இயற்றப்படுவதில் அவர்களுக்கும் பங்கிருக்க வேண்டும். மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக் கூடாது என்று தடுப்பதற்கு அவர்கள் உரிமை பெற்றிருக்க வேண்டும். ஏனென்றால், எந்த இளைஞர் உயிர் வாழ வேண்டு மென்பதற்காக அவர்கள் போர்க்களம் புகுந்தார்களோ, அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா?

சர்வாதிகாரிகள் தம் படைகளை ஆயத்தம் செய்து கொண்டார்கள். சமாதானத்தைக் குலைக்கத் திட்டமிட்டார்கள். உள்ளத்தைக் கவரத்தக்க முறையில் அவர்கள் இளைஞர்களுக்கு எடுத்தோதினார்கள். அவர்களுடைய நாட்டுப்பற்றையும் வீர உணர்ச்சியையும் பெருமிதத்தையும் கிண்டிவிட்டார்கள். தம் கேவலமான நோக்கங்களை மறைக்கும்பொருட்டு மிகுந்த ஆசை வார்த்தைகள் காட்டினார்கள். அவர்களுடைய பிரசாரகர்கள் மகா கெட்டிக்காரர்கள். அது போலவே எப்படிப்பட்ட காரியத்தையும் விவஸ்தை யில்லாமல் செய்யக் கூடியவர்கள். தாம் மேற் கொண்டிருக்கும் காரியம் மகா புனிதமான தென்று அளக்கிறவர்கள். இளைஞர்களுடைய நற்குணங்கள் அனைத்தையும் நாசப் படுத்தினார்கள். இப்படிப் பட்டவர்கள் நாட்டில் இருக்கத் தான் செய்கிறார்கள். தற்கால விஞ்ஞான அறிவை மகா முன்யோசனைக்கார அரசியல் வாதிகள் மிகச் சிறந்த முறையில் தமக்குச் சாதகமாக பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள். பத்திரிகைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் இப்படிப்பட்ட பிரசாரங்கள் நடை பெற வெட்டாதபடி தடுக்க வேண்டும்.

போர்முனைக்குப் போய்த் திரும்பியவர்களுக்கு மிகவும் முக்கியமான கடமையிருக்கிறது. போர் முனையில் எல்லா வகுப்பாருடனும் சேர்ந்து உண்டு சகோதர வாழ்வு வாழ்ந்து வந்தார்கள் அவர்கள். ஆகவே, அவர்கள் தம் சொந்த ஊர்களுக்குத் திரும்பிய பிறகு, அவர்களுடைய வாழ்க்கை முறையில் மாறுதல் உண்டாகும். இதற்கு அவர்கள் இடங்கொடுக்காது, தம் வீர வாழ்வை ஞாபகத்தில் வைக்கவேண்டும். உலக முழுதும் பாராட்டத்தக்க உயர் நிலையை இந்தியர்களுக்குத் தேடித் தந்தது தம் இராணுவ வாழ்வு என்றும், அப்போது எப்படிப்பட்ட சமூக வாழ்விற்கு உள்ளாகி யிருந்தார்களோ அதே வாழ்விற்கு தம் முதியோர்களையும் மாற்றிக்கொள்ள முயற்சிக்கவும் வேண்டும்.

சென்னையில் துருப்புகளுக்கு சௌகரியங்கள்

தென்னிந்திய படைத் தலைவர் பாராட்டுதல்

தென்னிந்திய படைத் தலைவர் சர் பெரிஸ்-போர்ட் பியர்ஸ், மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் மொழி பெயர்ப்பாவது :—

நான் சமீபத்தில் சென்னைக்கு வந்தேன். அப்போது மிகச் சிறந்த முறையில் தாராள மனப் பான்மை யோடு பல முயற்சிகள் நடைபெறுவதைக் காணும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அம் முயற்சிகளால் நல்ல உடல் நிலையோடும் நோயாகவும் உள்ள துருப்புகளின் வாழ்க்கை நிலை மேம்பாடடையும். இம் முயற்சிகள் முழுவதுமோ அல்லது ஒரு பாகமோ கவர்னர் யுத்த நிதியைக் கொண்டு தான் நடைபெறுகிறது. இந்த நிதியை, தாங்களே தங்கள் சொந்த முயற்சியினால் திரட்டி யிருக்கிறீர்கள்.

இதை, சென்னையை யடுத்துள்ள எல்லா பிரிட்டிஷ் துருப்புகளும் இந்தியத் துருப்புகளும் மிகவும் நன்றியறிதலோடு பாராட்டுகின்றன வென்று அவற்றின் சார்பாகத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொருளுதவி செய்தவர்களுக்கும், தொண்டு புரிந்தவர்களுக்கும் இன்னும் புரிந்து கொண்டிருப்பவர்களுக்கும் இப்பாராட்டுதலைத் தெரிவிப்பீர்களென்று நம்புகிறேன். உங்கள் ஊரை யடுத்து யுத்தங் காரணமாக வந்து தங்கி யிருக்கும் துருப்புகளின் நன்மையை முன்னிட்டு, அவர்கள் பெரிதும் உதவி யிருக்கிறார்கள்; இன்னும் உதவிக் கொண்டு யிருக்கிறார்கள்.

ஆசியருக்கு பிவின் மாணவர் கடிதம்

சென்ற ஜூலை மாதம் 20-ம் தேதி இங்கிலாந்திலுள்ள லாச்ஸர்த் என்னும் இடத்தில் உள்ள 'பிவின்' மாணவரான வி. எஸ். பொன்னுரங்க முதலியார், எல்.எ.இ., "மெட்ராஸ் வார் ரிவ்யூ" ஆசிரியருக்கு எழுதிய ஆங்கிலக் கடிதத்தின் மொழி பெயர்ப்பாவது :—

என் பயிற்சியில் நான் இங்கே வெகுவாக முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கிறே னென்று மிகவும் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். 'ரொடேரி' முதலிய பல சங்கங்கள் எனக்கு வரவேற்புக்களித்தன. அவற்றில் பல சங்கங்கள் இந்தியாவைக் குறித்த விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள மிகுந்த அக்கரையோ டிருக்கின்றன. ஆகவே, இந்தியாவைக் குறித்த உண்மை விவரங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவது எனக்கு மகிழ்ச்சியா யிருந்தது. அப்போதெல்லாம், நான் பெரிதும் உற்சாக மடைந்தேன். அவர்களில் பலர் எனக்கு நல்ல நண்பர்களானார்கள். அவர்களைக் குறித்த நன்னினைவுகளை நான் வெகுவாகப் போற்றுகிறேன்.

சென்ற ஜூலை மாதம் 10-ம் தேதி, தொழில் மந்திரி மிஸ்டர் பிவின், இந்திய வைசிராயாக நியமிக்கப்பட்டிருக்கும் மேன்மை தங்கிய பீல்ட் மார்ஷல் வேவல், சர் எஸ். இ. ரங்கநாதம் முதலியோர் எங்களுக்கு ஒரு வரவேற்பளித்தார்கள். அவர்களைக் குறித்துத் தகுந்தபடி உணர்ந்து கொள்ளுவதற்கு, எங்களுக்கு அது ஏற்ற தொரு தருணமா யிருந்தது. மிட்லன்ட்ஸ், மாஞ்செஸ்டர், ஹாரிங்டன் ஆகிய இடங்களில் என் பயிற்சி முடிந்து, இப்போது க்ளுஸ்டரி லிருக்கிறேன்.

நான் மிகச் சிறந்த உடல் நலத்தோடும் மகிழ்ச்சியோடும் இருக்கிறேன். வணக்கம்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.